# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

*மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌளரிஸ், ஜான்சி மேரி, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - தோகமலை, - வித்யா மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், மிரியம், ரஞ்சிதம், லோரா மேரி, பிரேமா, லில்லி இசபெல்லா மேரி, பாத்திமா, சகாயம், மரிய ரூபிக்குயின், மரிய சாந்தி வெண்ணிலா*

### பொதுநிலையினர்

*பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா,ஜேடன், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, செலின் மேரி, கிளாரா லூர்துமேரி, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், மேரி - இளையரசனேந்தல், இருதய விஜில்லா - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், ததேயுஸ் கரோலின் -திருப்பூர், அற்புதசீலி -திண்டுக்கல், மாசில்லா -தூத்துகுடி, புஷ்பக்கன்னு -கோவை, சிப்ரியான்-தெளி, ஜோசப்சக்கர்ஜானி- திருச்சி, மேரி மார்கிரேட்- திருச்சி, அந்தோணியம்மாள்- தூத்துகுடி, அடைக்கலமேரி சூரியா அன்புவளன், பாத்திமா, நிர்மலா மேரி செல்வம், மார்கிரேட்*

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோ. மேரி செசாரியா- சென்னை**
**திருமதி. அந்தோணியம்மாள் - தூத்துகுடி**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. M. Antony Shaji OSM.**





# அன்னையின் அர்ப்பணம்

## பதிப்பாசிரியர் பக்கம்




அன்பு வாசகர்களே! அன்னை மரியின் பக்தர்களே!

ஆகட்டும் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. தூய கன்னி மரியா காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா பாரம்பரியமாக மக்கள் மத்தியில் இருந்து வரும் ஒன்றாகும். இதனை *'அன்னை மரியா ஆலயத்தில் நுழையும் விழா'* என்று கிரேக்கர்கள் கொண்டாடினர். மரியாவின் குழந்தை பருவ நிகழ்வுகளை பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் எந்த குறிப்பையும் தரவில்லை. திருமறைசாராத வரலாற்று தன்மையற்ற யாக்கோபு நற்செய்தி மரியாவின் குழந்தை பருவம் தொடர்பான செய்திகளை கொடுக்கிறது. இந்நற்செய்தியின்படி மரியாவின் பெற்றோர் சுவக்கீன் மற்றும் அண்ணா இருவரும் தங்கள் முதிர்ந்த வயதுவரை குழந்தையின்றி இருந்தார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டியபோது இவர்களுக்கு மரியா பிறந்தார். யூத மரபின்படி அனைத்து யூத பெண்களும் ஒரு குறிப்பிட்ட காலம் ஆலயத்தில் விடப்பட்டார்கள். அக்காலகட்டத்தில் அவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. மரியாவின் பெற்றோரும் தங்களுக்கு பிள்ளை வரம் கிடைத்ததற்கு நன்றியாக மரியாவுக்கு மூன்று வயது நடைபெறும்போது



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
அன்னை மரியாவின் திருப்பயணம் - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
மீப்புப்பயணம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

அவரை எருசலேம் ஆலயத்தில் ஆண்டவருக்கு காணிக்கையாக்கினர். இவர்கள் இந்த உலகத்தில் தங்களிடமிருந்த விலையுர்ந்த பொக்கிஷத்தை, தங்கள் இதயத்திற்கு மிகவும் உகந்ததை ஆண்டவருக்கு அர்ப்பணமாக்குகிறார்கள். கைகளில் எரியும் விளக்குகளை கொண்ட யூத கன்னிப்பெண்கள் புடைச்சூழ மரியா ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டார். அங்கே குரு அவரை கைகளில் ஏந்தி ஆசீர்வதித்து முத்தமிட்டு வரவேற்கிறார். அப்போது அவர் 'கடவுள் உன் பெயரை எல்லா தலைமுறைக்குமாக மேன்மைப்படுத்தினார். தம் பிள்ளைகளாகிய இஸ்ரேயலுக்கு அவர் தரும் மீட்பினை உம்மில் வெளிப்படுத்துவார்' என்று அறிக்கையிடுகின்றார். மரியா இளம் வயது வரை ஆலயத்தில் இருந்தார் என்று குறிப்பிடப்படுகிறது.

கன்னி மரியாவை காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் இவ்விழாவானது கீழே திருச்சபையான எருசலேமில் 6ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. பைசாந்திய பேரரசர் முதலாம் ஜஸ்டீனியன், சிதையுற்ற பழங்கால எருசலேம் ஆலயத்திற்கு அருகாமையில் 543 ஆம் ஆண்டு ஒரு ஆலயம் எழுப்பி அதை தூய கன்னி மரியாவிற்கு அர்ப்பணித்தார். அது முதல் இவ்விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. 614 ஆம் ஆண்டு எருசலேம் முற்றுகையின்போது இந்த ஆலயம் இடிக்கப்பட்டாலும், மக்கள் தொடர்ந்து இவ்விழாவினை கொண்டாடிவருகின்றார்கள். திருத்தந்தை பதினோராம் கிரகோரி இவ்விழாவினை பற்றி கேள்விப்பட்டு 1372ல் கிரீஸிலும், 1333ல் பிரான்ஸின் அவிங்னோனிலும் நவம்பர் 21 இல் கொண்டாட ஏற்பாடு செய்தார். இந்தவிழா 1472ல் திருத்தந்தை நான்காம் சிஸ்துஸ் என்பவரால் உரோமை திருப்பலி புத்தகத்தில் சேர்க்கப்பட்டு திருஅவை முழுவதும் கொண்டாடப்பட்டது. திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதரால் இத் திருநாள் 1568 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது. எனினும் 1585 இல் திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ் இதை மீண்டும் உரோமை திருவழிபாட்டு நாட்காட்டியில் சேர்த்தார்.

மரியா இறைவன்மீது கொண்ட அன்பு முழுமையானது. பிளவோ கலப்படமோ இல்லாதது. பிளவுபட்ட இதயத்தை இறைவன் ஏற்பதில்லை. எனவே 'உன் கடவுளாகிய ஆண்டவரிடம் முழு இதயத்துடன் அன்பு கூறுவாயாக' என்ற கட்டளையை கருத்தில் கொண்ட மரியா, தனக்கு, தன் விருப்பம் என்று எதையும் தக்க வைத்துக் கொள்ளாமல் தன்னை முழுமையாக அர்ப்பணமாக்கினார்

மரியாவின் வழியாக நம்மை இறைவனுக்கு அர்ப்பணமாக்குவோம். மரியாவின் பாதையில் பயணித்து கடவுளின் மகிழ்வில் பங்கபெறுவோம்.





வரத்திற்காக மாதாவிடம் மன்றாடினேன், குழந்தை வரம் கிடைத்தது. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

*5. சாத்வீகம்*

நான் இந்து மதத்தை சார்ந்தவன். என் குடும்பம் முழுவதும் இந்து. என் மனைவியும் நானும் கிறிஸ்துவராக மாறவிட்டோம். நான் இனம் புரியாத நோயினால் பாதிக்கப்பட்டேன். நான் கடமைக்கு கோவிலுக்கு செல்வேன். அப்போது என் மனைவி கிறிஸ்தவராக மாறினால் போதாது ஆலயத்திற்கு சென்று ஜெபம் செய்து நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றார். அதே போல் தஞ்சாவூரு ஆலயத்திற்கு சென்றேன் அங்கு தியானம் நடந்ததுகொண்டிருந்தது. மதிய வேளையிலே சாப்பிட சொன்னார்கள் எனக்கு சாப்பிட முடியாது மிகுந்த அவஸ்தைப்பட்டேன். மூச்சுத்திணறலோடு சாப்பிட கஷ்டமாக இருந்தது. நான் இங்கு வந்து ஜீவ மாதாவிடம் மன்றாடினேன் 'என் நோயை குணப்படுத்துங்கள்' நம்பிக்கையோடு அதே போல் நான் சுகமானேன். என் அழுகுரல் கேட்டு குணம் அளித்த அன்னைக்கு நன்றிகள். உணவே சாப்பிடமுடியாத நான் இப்பொழுது நிறைய சாப்பிடுகிறேன். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

*6. பவதாரிணி*

என் தங்கைக்கு 2022-ல் திருமணம் நடந்தது, குழந்தை இல்லை, PCOD பிரச்சினை இருந்தது. போன வருடம் இதே அக்டோபர் மாதம் மாதாவுக்கு சீமந்தம் நடத்திக் கொண்டிருந்தார்கள் ஒரு குடும்பம். நான் ஆச்சரியப்பட்டு இது என்ன என்று கேட்டேன். அதற்கு 'மாதா எங்களுக்கு குழந்தை வரம் கொடுத்தார்கள் அதற்கு நன்றிக்கடன்' என்றார்கள். நானும் என் தங்கைக்காக மனதுருக மன்றாடினேன். அதேபோல் என் தங்கைக்கு குழந்தை வரம் கிடைத்தது. நன்றி அம்மா! *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

*1.தேவசகாயம், லூர்துமேரி*

நான் மாதவரத்திலிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி குழந்தை வரம் இல்லாமல் இருந்தது. நான் மனதுருக மாதாவிடம் மன்றாடினேன், குழந்தை கருத்தரித்து கரு கலைந்துவிட்டது. தொடர்ந்து மாதாவிடம் மன்றாடிய போது எனக்கு குழந்தை வரம் கிடைத்தது. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

*2. புவனேஸ்வரி*

என் குழந்தைக்கு fix வந்துக்கொண்டிருந்தது, நான் ஒன்றும் புரியாமல் தவித்தேன். மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் நிறைய பரிசோதனை செய்தார்கள், ஒன்றும் பலனில்லை. நான் ஜீவ மாதாவிடம் வந்து விண்ணப்பித்தேன். பங்கு தந்தை "விண்ணப்பம் எழுதி வைத்துவிட்டு போங்கள், நாங்கள் ஜெபம் செய்வோம்" என்றார். அதே போல் நான் எழுதி வைத்து விட்டுப் போனேன். என் குழந்தைக்கு சுகம் கிடைத்தது. மீண்டும் குழந்தைக்கு உடல் நலம் சரியில்லாமல் போனது. நான் நம்பிக்கையை விடாமல் மாதாவிடம் மன்றாடினேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை மாதாவின் பரிந்துரையால் குழந்தைக்கு சுகம் கிடைத்தது. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

3. கிளாரா

நான் கூடுவாஞ்சேரியில் இருந்து வருகிறேன். நான் கடந்த மூன்று வருடங்களாக ஜீவ மாதாவிடம் வருகிறேன் என் மகளுக்கு திருமணமாகி குழந்தை வரம் இல்லாமல் இருந்தது. நான் மாதாவிடம் மன்றாடினேன், என் மகளுக்கு குழந்தை வரம் கிடைத்தது. மேலும், என் மகனுக்கு திருமண வரம் கிடைக்கவில்லை, நான் ஜீவ மாதாவிடம் என் மகனுக்கு நல்ல ஒரு பெண் கிடைக்க வேண்டும் என்று மன்றாடினேன், அதேபோல் நல்ல வரம் அமைந்தது. என் மகனுக்கு நல்ல மனைவியாகவும் எனக்கு பொறுப்பான மருமகளாகவும் அமைந்தது. அன்னையின் அற்புதமான பரிந்துரையால் கிடைத்தது. நன்றி அம்மா. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

*4. ஜிஜ்ஜோ*

எனக்கு திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தை வரம் இல்லை. நண்பர் ஒருவர் ஜீவமாதாவின் படம் கொடுத்து செபிக்க சொன்னார். நான் குழந்தை





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



இரண்டு நண்பர்கள் பாலைவனத்தின் வழியாக நடந்து கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில், அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது, ஒரு நண்பர் மற்றொருவரின் முகத்தில் அறைந்தார். அறைவாங்கியவர் காயமடைந்தார், ஆனால் எதுவும் சொல்லவில்லை. அவர் குனிந்து மணலில் எழுதினார்:

"இன்று, என் சிறந்த நண்பர் என் முகத்தில் அறைந்தார்' என்று.

அவர்கள் ஒரு சோலையைக் கண்டுபிடிக்கும் வரை நடந்து கொண்டேயிருந்தனர். அவர்கள் குளிக்க முடிவு செய்தனர். குளிக்கும் போது, அறைவாங்கிய நண்பர் நீரில் மூழ்கத் தொடங்கினார், ஆனால் மற்ற நண்பர் அவரைக் காப்பாற்றினார். வெளியே வந்தபிறகு, அவர் ஒரு உளி எடுத்து ஒரு கல்லில் செதுக்கினார்:

"இன்று, என் சிறந்த நண்பர் என் உயிரைக் காப்பாற்றினார்.' என்று காப்பாற்றிய நண்பர் கேட்டார், "நான் உன்னை அடித்தபோது, நீ மணலில் எழுதினாய். ஆனால் இப்போது நீ கல்லில் எழுதுகிறாய். ஏன்?

மற்றொரு நண்பர் சிரித்துக்கொண்டே கூறினார்,

"யாராவது நம்மை காயப்படுத்தும்போது, மன்னிப்பு என்ற காற்று அதை அழிக்கக்கூடிய மணலில் எழுத வேண்டும். ஆனால் யாராவது ஏதாவது நல்லது செய்யும்போது, எந்தக் காற்றும் அழிக்க முடியாத இடத்தில் அதை பொறிக்கவேண்டும். ஆதனால்தான் கல்லில் பொறித்தேன்' என்று கூறினார்.

அன்னை மரியாள் தன்னுடைய வாழ்நாளில் யாரையும் எந்த சூழ்நிலையிலும் குறை கூறியதாக இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நிதானமாக சிந்தித்தவராக அதை தியானித்தவராக இருந்தார். ஒவ்வொரு மனிதரிலும் நிறைவானதையே கண்டார். குறைகளை அவர் காணும்போதெல்லாம் அதை எவ்வாறு நிறைவாக மாற்ற வேண்டும் என்பதில் தான் முயற்சி எடுத்தார். அவரை அன்னையாக கொண்டிருக்கின்ற நாம் வாழும் சமூகத்தில் பிறரை மன்னித்து, பிறரின் நல்ல குணாதிசயங்களை போற்றி, ஒரு மகிழ்வான சமூகத்தை உருவாக்க தொடர்ந்து பயணிப்போம். அன்னை மரியின் ஆசிரை நாடுவோம்.

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**பயணம் நான்கு**

**தொடக்கவுரை**

ஜூபிலி 2025 ஆம் ஆண்டின் கொண்டாட்டங்கள் நிறைவுக்கு வரும் காலக் கட்டத்தில் இருக்கிறோம். வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் உள்ள திருத்தலங்கள் இறைமக்கள் கூட்டத்தினால் நிரம்பி வழிகின்றன. ஒரு சில மக்கள் உண்மையிலேயே தாங்கள் சந்திக்கும் கோவில்களில் தனித்து ஆழ்ந்த நிலையில் செபிக்கின்றனர். இறைவனோடு நெருக்கமாகச் செல்லும்போது நமது வாழ்விலும் புதுப்பித்தலுக்கான மாற்றங்கள் நிகழ வேண்டும். நமது உறவுகளைப் புதுப்பித்து புதிய சமுதாயம் படைக்கவே இறைவன் விரும்புகின்றார். நமது ஆன்மிகத்திற்கு விளக்கமே உறவுகளின் சங்கமம் தான். இதை உணர்த்தவே இறைவன் மனிதன் ஆனார். திருவருகைக்காலம் நெருங்கி வருகின்றது. ஜூபிலி ஆண்டின் கிறிஸ்து பிறப்பு விழாவை ஆர்வமுடன் கொண்டாட கிறிஸ்தவர்கள் இன்னும் அதிகமான திருப்பயணங்களை மேற்கொள்வார்கள்.

நவம்பர் மாதம் கிறிஸ்தவர்களின் வாழ்வில் மிகவும் முக்கியமானது. நிலையான, நிரந்தரமற்ற வாழ்வினைப் பற்றிய சிந்தனைகளை நம்மில் எழுப்பும் காலம். நம்மை மிகவும் அன்பு செய்தவர்கள், நாம் நேசித்தவர்கள் நம்மை விட்டுப் பிரிந்ததால் அவர்கள் நினைவாக செலவழிக்கும் காலம். அவர்கள் இறைவனில் இளைப்பாற, விண்ணகப் பேற்றினை அடைய நமது நேரங்களை இறைவேண்டலில் அதிகம் செலவிடுகிறோம். ஆழ்ந்து சிந்தனை செய்தால், இவ்வுலகில் நிலையானது எதுவுமில்லை. நாம் அனைவரும் பயணிகளே என்ற உண்மையே மேலோங்கி நிற்கிறது. பயணிகள் தாங்கள் அடைய வேண்டிய இடத்தை நோக்கிப் பயணிப்பது போல, இறைமக்களாகிய நாமும் நமது தாய்நாடாம் புதிய எருசலேமாகிய விண்ணகத்தை நோக்கிப் பயணிக்கின்றோம். இவ்விதழில் தூய கன்னி மரியாவின் நான்காவது பயணத்தைத் தியானிக்க இருக்கின்றோம். குழந்தை இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்க அவர் எருசலேம் ஆலயத்திற்குப் பயணித்ததை இக்கட்டுரை சுமந்து வருகிறது. அவரின் இப்பயணம் நமக்கு உணர்த்தும் உயர் சிந்தனைகள், நல்ல செய்திகளை உள்வாங்கி நமது ஆன்மிகத்தைப் பலப்படுத்துவோம். இந்த நான்காவது பயணம் நமது திருப்பயணங்களுக்கு வளமையையும் செழுமையையும் ஊட்டட்டும்.

**இறைவனை ஏந்திச் செல்லும் மரியா**

லூக்கா தமது நற்செய்தியில் இரண்டு காரியங்களுக்காக மரியா எருசலேம் ஆலயத்திற்குச் செல்வதாகக் குறிப்பிடுகின்றார். முதலில் தூய்மைச் சடங்கை நிறைவேற்ற, இரண்டாவதாக பிறந்த நாற்பதாவது நாளில் குழந்தை இயேசுவை இறைவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்க. யூதச் சட்டப்படி ஒரு பெண், ஆண் குழந்தை பெற்றால் 40 நாட்கள் கழித்தும், பெண் குழந்தை பெற்றால் 80 நாட்கள் கழித்தும் தூய்மைச் சடங்கிற்குத் தன்னை உட்படுத்த வேண்டும். தூய்மையடையும் காலக்கெடுவிற்குப்





மீது நமது நிழலின் வாயிலாக அசைவாடிக் கொண்டிருந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

**அன்னை மரியா வார்த்தையின் அழகோவியம்**

புனித பேசில் அன்னை மரியாவின் அழகோவியம் என்று அவரின் கன்னிமைத் தன்மையினை எடுத்துரைக்கிறார். அதற்கு இறைவார்த்தையையே அதிகமாக பயன்படுத்துகிறார் (ஏசா 7:11) இல் காணப்படும் "உன் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும்" என்ற இறைவார்த்தையில் வரும் அடையாளம் என்ற வார்த்தையே அன்னை மரியாவின் கன்னித்தன்மைக்கு அடையாளமாக கூறுகிறார்.

"ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை அருள்வார், இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண், (கன்னிப்பெண்) ஓர் ஆண் மகவை பெற்றெடுப்பார்" என்ற (எசா 7:14) இறைவார்த்தையை பயன்படுத்தி கன்னிப் பெண் கருவுற்று இருப்பதை அடையாளமாக கூறுகிறார். இத்தகைய தன்மையை விளக்கி புனித பேசில் மேலும் எபேசியர் 4:9 இறைவார்த்தையை பயன்படுத்துகிறார். "ஏறிச் சென்றார்" என்பதால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா? இந்த இரண்டு வார்த்தைகளையும் ஒன்றிணைத்து அடையாளம் என்ற ஒரு சொல் இரண்டு விதத்தில் பொருள்படும்படி விளக்கி தருகிறார். கன்னிப் பெண்ணுக்கும் இளம் பெண்ணுக்கும் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமையை விளக்கும்படியாக புனித பேசில் 'அடையாளம்' என்று வார்த்தையினை பயன்படுத்துகிறார். கன்னிப் பெண்ணை இளம் பெண்ணாக குறிப்பிட புனித பேசில் 'ஆல்மா' (almah) என்ற எபிரேய மொழிச் சொல்லை பயன்படுத்துகிறார். மேலும் இந்த 'ஆல்மா' என்ற சொல் திருமண வயது வந்த பெண்ணையும் குறிக்க பயன்படும் சொல்லாக இருக்கிறது. ஆனால் இந்த 'ஆல்மா' என்ற சொல் இயல்பாகவே 'கன்னி' என்று அர்த்தமல்ல இஸ்ரேல் மக்கள் வாழ்வில் திருமணமாகாத ஒரு இளம் பெண்ணுக்கு 'பெதுலா' என்று சொல்லை பயன்படுத்தாமல் 'ஆல்மா' என்று நேரடி மொழிபெயர்ப்பு சொல்லையே புனித பேசில் பயன்படுத்துகிறார். அதை புனித பேசில் அன்னை மரியாவுக்கு பயன்படுத்துகிறார். புனித பேசிலின் கூற்றுப்படி அன்னை மரியா, புனித யோசேப்புக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்டவராகவும், கன்னி பெண்ணாகவும், ஆண்டவர் இயேசுவின் தாயாகவும் குறிப்பிடுகிறார்.

**மரியாவின் கன்னிமைக்கு விடையளிக்கிறார்**

"மரியா தம் மகனை பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" மத்தேயு 1:25 இந்த இறை வார்த்தைக்கு விளக்கம் தருகையில் புனித பேசில் "பெற்றெடுக்கும் வரையில்" உள்ள "வரை" ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் (until) என்ற வார்த்தைக்கு விளக்கம் தருகிறார். தமிழில் மொழிபெயர்க்கும் அறிஞர்கள் "பெற்றெடுக்கும் வரை" என்ற வார்த்தையோடு சேர்த்து மொழி பெயர்த்துள்ளனர். இந்த இறைவார்த்தையை விளங்குவதற்கு புனித பேசில் மத்தேயு 28:20 ஆவது இறைவார்த்தையை பயன்படுத்துகிறார். "இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" இந்த இறைவார்த்தையிலுள்ள முடிவுரையில் உள்ள "வரை"க்கும் அதே ஆங்கில மொழியாக்கத்தில் உள்ள (until) என்ற வார்த்தையே பயன்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு இறை வார்த்தைகளையும் இணைத்து "வரை" (until) என்ற சொல் நேரத்தை குறிக்கின்ற சொல்லாக பார்த்து புனித யோசேப்பு அன்னை மரியாவை எல்லா நேரமும் பாதுகாத்து வந்தார் என்ற கருத்தை முன்வைக்கின்றார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
சென்னை

25



சென்ற மாத இதழில் புனித சிரில் பழைய ஏவாளையும் புதிய ஏவாளாகிய அன்னை மரியாவையும் குறித்து கூறிய கருத்துக்களைப் பற்றி பார்த்தோம். இந்த மாத கட்டுரையில் கப்பதோசிய தந்தையர்களை பற்றியும் அவர்கள் அன்னை மரியாவைக் குறித்து கூறிய கருத்துக்களை பற்றியும் காண்போம். கிபி நான்காம் நூற்றாண்டில் கப்பதோச்சியா பகுதியில் வாழ்ந்த மூன்று இறையியல் தந்தையர்கள், தாங்கள் வாழ்ந்த வாழ்க்கை நெறியின் பயனாகவும் தாங்கள் ஏற்படுத்திய துறவு வாழ்வின் அடையாளமாகவும் திருஅவைக்கு பல பணிகள் ஆற்றினர். அவர்கள் பின்வருமாறு:

1. துறவு வாழ்க்கையின் தந்தை என அழைக்கப்படும் **புனித பெரிய பேசில்** (St Basil the great)
2. புனித பேசில் அவரின் சிறந்த தோழரான நாசியான்சு நகரை சேர்ந்த **புனித கிரகோரி** (St Gregory of Nazianz)
3. புனித பேசலின் சகோதரரான நைசா நகரத்தை சேர்ந்த **புனித கிரகோரி** (St Gregory the Nyssa)

இம்மூவரும் தொடக்கத் திருஅவைக்கு கிடைக்கப்பெற்ற கொடையாகும். தாங்கள் எழுதிய புத்தகத்தின் வாயிலாகவும் தாங்கள் ஆற்றிய பணியின் வாயிலாகவும் திருஅவையில் அன்பும் அமைதியும் நிலவ பணிகள் பல ஆற்றினர். இந்த மூன்று திருஅவையின் தந்தையர்களுமே அலெக்ஸாண்ட்ரியா நகரத்து புனித அத்தனாசியுசின் கருத்துக்களின் அடிப்படையில் இறையியல் கருத்துக்களை பகிர்ந்தளித்தனர். இந்த மூவர்களோடு இக்கோனியா நகரத்தை சார்ந்த ஆம்பிளோசியுஸ் இறைபணியாற்ற பங்கு பெறுகின்றார். இவர் நசியான்சு நகரத்தைச் சார்ந்த புனித கிரகோரின் உறவினர் ஆவார். இந்த நான்கு தந்தையர்களுமே மரியாவை பற்றி நேரடியாக பேசவில்லை. எனினும் கிறிஸ்தியல் பற்றி பேசும்போதும் மூவொரு கடவுளின் ஒன்றிப்பை பற்றி பேசும்போதும் அன்னை மரியாவை பற்றி எடுத்துரைக்கின்றனர்.

**புனித பேசிலின் பார்வையில் அன்னை மரியாவின் கன்னித்தன்மை**

துறவு வாழ்க்கையின் அல்லது அதை காட்டிலும் வனாந்தர துறவு வாழ்க்கையின் தந்தை என அழைக்கப்படும் புனித பேசில் கத்தோலிக்க திருஅவையின் திருவழிபாட்டின் கோட்பாடுகளை நெறிப்படுத்திய சிறந்த நெறியாளர் ஆவார். மீட்பின் வரலாற்றில் கிறிஸ்துவின் மண்ணக பிறப்பு என்று அழைக்கப்படும் கடவுள் மனிதராகிறார் என்ற செய்தியில் அன்னை மரியாவை மையப்படுத்தி எழுதுகிறார். தூய ஆவியாரின் நிழலுக்கு அன்னை மரியா தகுதியானவர் என்று குறிப்பிடுகிறார். "கிறிஸ்துவை தாங்குவதற்கு அன்னை மரியாவின் உடலை தூய ஆவியார் சரிபடுத்துகிறார்" என்று புனித பேசில் குறிப்பிடுகிறார். படைப்பின் தொடக்கத்தில் தூய ஆவியார் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார் என்று வாசிக்கிறோம். அதுபோல மீட்பின் (அ) மீட்பர் கிறிஸ்துவின் பிறப்பில் தூய ஆவியார் அன்னை மரியாவின்





பின்னர் ஓராண்டு நிறைவுற்ற செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறா குஞ்சு அல்லது காட்டுப்புறா ஒன்றை பாவம் போக்கும் பலியாகவும் குருவிடம் சந்திப்புக் கூடாரத்தின் நுழைவாயிலுக்குக் கொண்டு வர வேண்டும். அதனை அவர் ஆண்டவர் திருமுன் கொண்டு வந்து அப்பெண்ணுக்குத் தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டும். இது ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றவருக்கு விதிக்கப்படும் சட்டம். ஆட்டுக்குட்டி கொண்டு வர வசதி இல்லாதவர், இரண்டு காட்டுப் புறாக்களையோ, இரண்டு புறாக் குஞ்சுகளையோ கொண்டு வந்து ஒன்றை எரிபலியாகவும், மற்றதை பாவம் போக்கும் பலியாகவும் படைக்க குரு அவருக்குத் தூய்மைச் சடங்கினை நிறைவேற்றுவார். அப்போது அவர் தூய்மையாவார். இவ்வாறு லேவியர் நூல் 12ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம். அமல உற்பவியாக பிறந்த மரியா, இறைவனின் அருள் வரங்களை முழுமையாகப் பெற்ற மரியா தன்னைத் தூய்மைச் சடங்கிற்கு உட்படுத்துகின்றார். திருச்சட்டம் அனைத்தும் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன என்பதை மரியா நம்பினார். திருச்சட்டங்களின் வழியாக இறைவனின் விருப்பத்தை அறிய வருகிறோம். அதை நிறைவேற்றுவதே நமது வாழ்வின் நோக்கம் என்பதை மரியா நமக்கு உணர்த்துகின்றார். சமுதாயத்தில் வாழும் சாமானியரைப் போன்று தானும் சட்டத்திற்கு உட்பட்டவரே என்ற தாழ்ச்சிநிறை உள்ளத்துடன் இங்கு நிற்கின்றார். இதே மனநிலையில் தான் இயேசுவும் நான் திருச்சட்டத்தை நிறைவேற்றவே வந்தேன் என்று கூறுகின்றார்.

**இறைவனை அர்ப்பணிக்கும் மரியா**

திருக்கோவிலுக்குச் சென்ற மரியாவின் திருப்பயணத்தின் இரண்டாவது கட்டமாக குழந்தை இயேசுவை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சடங்கினை நிறைவேற்ற முன்வருகின்றார். 'ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" (லூக்கா 2:23) என்ற மோசேயின் திருச்சட்டம் இங்கு நிறைவேற்றப்படுகின்றது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக் குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. தன்னைத் தூய்மைப்படுத்திய பிறகு திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதைக் குழந்தை இயேசுவுக்குச் செய்து முடிக்கப் பெற்றோர் அதனை உள்ளே கொண்டு வந்த போது நடந்த நிகழ்வுகள் மிகவும் முக்கியமானவை. திருச்சடங்குகளை நிறைவேற்றும் முன்பே சிமியோன் இறைவாக்கினர் குழந்தையைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றுகின்றார். அவரே மீட்பர் என்றும், பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி என்றும், இஸ்ரயேல் மக்களுக்குப் பெருமை என்றும் பறைசாற்றுகின்றார். குழந்தையைக் குறித்து இறைவாக்கினர் கூறியதைப் பற்றி மரியாவும் சூசையும் வியப்புறுகின்றனர். சிமியோன் மூவரையும் ஆசீர்வதிக்கின்றார். மீண்டும் குழந்தையைப் பார்த்து 'இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும்" (லூக்கா 2:34). இவ்வாறு குழந்தையின் அர்ப்பண நாளில் உலக மீட்பின் நாள் குறிக்கப்படுகிறது. இவர் எதிர்ப்புக்கு உள்ளாகி கொல்லப்படுவார். ஆயினும் பலர் இவர் பிறப்பால், வாழ்வால் எழுச்சி பெறுவர் என்றும் அறிவிக்கின்றார். இவ்வாறு இயேசுவின் பிறப்பு சிலுவை மரணத்தை நோக்கிய ஒரு பயணம். இப்பயணத்தில் மரியா தன்னை முழுமையாக இணைப்பதால் அவருடைய உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்றும் இறைவாக்கு உரைக்கப்படுகிறது. மரியாவின் உள்ளத்தை ஒரு வாள் அல்ல, ஓராயிரம் வாள்கள் ஊடுருவியது என்பதை நாம் அறிவோம்.

தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வந்த மரியாவுக்கு உலகின் பாவக்கறையைப் போக்க தம் மகனோடு மீட்புத் திட்டத்தில் பங்கேற்க இறைவன் அழைப்பு விடுக்கின்றார்.

மரியா பதில் எதுவும் சொல்லவில்லை. அனைத்தையும் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார். அன்னா இறைவாக்கினரும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லோரிடமும் அக்குழந்தையை பற்றிப் பேசினார். பிறகு ஆண்டவருடைய திருச்சட்டப்படி குழந்தைக்கு எல்லாவற்றையும் செய்து முடித்த பின் நாசரேத்துக்குத் திரும்பிச் செல்கின்றார்கள். குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது. திருக்குடும்பத்தை ஆசீர்வதித்த சிமியோன் நேர்மையானவர், இறைப்பற்றுக் கொண்டவர். இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர். தூய ஆவியை அவர் பெற்றிருந்தார். ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் அவர் சாகப் போவதில்லை என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார். அந்த ஆவியின் தூண்டுதலால் அவர் கோவிலுக்கு வந்திருந்தார். இத்தகைய கடவுளின் ஆசிரால் நிரம்பப் பெற்றிருந்த இறைவாக்கினர் சிமியோனின் கரங்களில் இயேசு தவழ்ந்தார். ஆண்டவருடைய அடியாரின் வழியாக இறைவனே தம்மை ஆசீர்வதித்ததையும், இறைக்குரலைக் கேட்டவர்களாய் திருக்குடும்பம் எருசலேமை விட்டு நாசரேத்தை நோக்கிப் பயணித்தது. அங்குதான் இயேசுவின் பொதுவாழ்வுப் பணிகள் ஆரம்பமாயின. திருமுழுக்கின்போது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் குழந்தைகள் நம் குடும்பங்களில் எவ்வாறு வாழ்கின்றனர். இந்த அருள் அடையாளத்தின் பொருள் அவர்களுக்கு ஊட்டப்படுகிறதா என்பதையும் நாம் இங்கு சிந்திக்க வேண்டும்.

**நான்காவது பயணத்தின் பாடங்கள்**

மரியாவின் நான்காவது திருப்பயணம் பல பாடங்களை நமக்கு கற்றுத் தருகிறது. நாமும் திருச்சட்டங்களை, நற்செய்தியின் அறிவுரைகளை, திருஅவையின் கட்டளைகளைப் போற்ற வேண்டும், நேசிக்க வேண்டும், பின்பற்ற வேண்டும். அவற்றின் வழியே இறைக்குரல் ஒலிக்கின்றது. இறைக்குரலுக்குப் பணிபவர்கள்தான் அவரை 'அப்பா தந்தையே" என்று அழைக்க முடியும். சட்டங்கள் இல்லாத வாழ்வு நம்மில் கட்டுப்பாடற்ற ஒரு நிலையை உருவாக்கும். அந்த நிலையை நாம் சுதந்திரம் என்று எண்ணிக் கொள்ளலாம். அது தவறு. 'நீ சட்டத்தைக் காப்பாற்றினால் சட்டம் உன்னைக் காப்பாற்றும்" என்பது தான் எதார்த்தம். எனவே விடுதலை தரும் சட்டங்களை மதிப்போம். திருக்குடும்பம் அதை நேசித்தது. முதல் திருப்பாடல் மிக அருமையாக பின்வருமாறு கூறுகிறது, 'நற்பேறு பெற்றவர் யார்? அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர் அவரது சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர். அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் இருப்பார் பருவக் காலத்தில் கனி தந்து, என்றும் பசுமையாய் இருக்கும் மரத்திற்கு ஒப்பாவர் தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார்". எனவே எத்தகைய சட்டங்களாக இருந்தாலும் முழு மனதுடன் நாம் அவற்றைக் கடைபிடிக்கும்போது இறைவனுக்குப் பிரியமுள்ளவர்களாக இருக்கிறோம். சமுதாயத்தில் அமைதியை விதைப்பவர்களாக மாறுகிறோம். நம் உள்ளங்களிலும் உண்மையான மகிழ்ச்சி பிறக்கின்றது.

அன்னையின் சுத்திகர நிகழ்வில் பல கதாப்பாத்திரங்கள் இடம்பெறுகின்றனர். ஒவ்வொருவரிலும் ஆவியாரின் செயல்பாடும், மீட்பைக் காண வேண்டிய ஆர்வமும், அர்ப்பண மனநிலையும் வெளிப்படுகின்றன. அர்ப்பண மனநிலை ஆண்டவருக்குப் பணிசெய்ய அழைத்துச் செல்கின்றது. இதற்குத் தேவையான பண்புகளான பணிவு, தாழ்ச்சி, இறைவிருப்பத்தை நிறைவேற்றுதல் ஆகியவையும் இந்த நபர்களில்

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





எவரும் முன்வர மாட்டார்கள்'. என்று கூறியுள்ளார். இந்நிகழ்வுகளின் மூலம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் எண்ணற்ற ஆன்மாக்கள் துன்புறுகின்றன என்பதை நாம் அறியலாம்.

**தூய்மை பெறும் ஆன்மாக்களின் அன்னை:**

அன்னை மரியாள் எல்லா சனிக்கிழமைகளிலும் மற்றும் அவருடைய திருநாட்களிலும் உத்தரிக்கிற ஸ்தலம் சென்று ஆன்மாக்களை மீட்கிறார் என்று சுப்பே அடிகளார் கூறுகிறார். ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் அன்னையின் விண்ணேற்பு திருவிழா அன்று அன்னை மரியாள் உத்தரிக்கிற ஸ்தலம் சென்று ஏராளமான ஆன்மாக்களை மீட்கிறார் என்று புனித பீட்டர் தமியான் எழுதி வைத்துள்ளார். புனித பவுஸ்தீனாவை அவருடைய காவல் தூதர் உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு அழைத்து சென்ற போது அங்கு அன்னை மரியாள் தூய்மை பெறும் ஆன்மாக்களை சந்திப்பதை காண்கின்றார். அவ்வான்மாக்கள் அன்னையை 'பெருங்கடலின் விண்மீனே' என்று வாழ்த்துவதைக் காண்கின்றார். இதனை தனது குறிப்பேட்டில் (குறிப்பேடு:20) எழுதி வைத்துள்ளார். அன்னை மரியாள் தூய்மை பெறும் நிலையிலுள்ள ஆன்மாக்களை அடிக்கடி சந்தித்து 'நீங்கள் ஏராளமான நற்செயல்களை புரிந்துள்ளீர்கள்' என்று கூறி உற்சாகப்படுத்துவதாக மரிய ஸிம்மா எழுதி வைத்துள்ளார்.

**தூய்மைபெறும் ஆன்மாக்களுக்கு உதவி செய்தல்:**

திருப்பலி, மன்றாட்டு தான தர்மங்கள் உள்ளிட்டவற்றின் மூலம் உலகிலிருந்து விடுபட்ட ஆன்மாக்களுக்கு புத்தணர்ச்சியையும் இளைப்பாறுதலையும் பெற்றுக்கொடுக்க முடியும். மரணத்திற்கு பின்வரும் வாழ்வையும் அன்பு சென்றடைய முடியும் என்பதும் திடமான கிறிஸ்தவ நம்பிக்கையாகும் என்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் கூறுகிறார். 'மரித்த ஆன்மாக்களின் மீட்பின் பொருட்டு ஒப்புக்கொடுப்பது எதுவாக இருந்தாலும், இரக்கமும் பொறுத்தலும் அளிக்கும் என்னுடைய இறைத்தன்மையின்படி அவர்களுக்காக அதை விரைவாகப் பயன்படுத்துவேன்' என்று இயேசு புனித ஜெர்த்ரூத்திடம் கூறியுள்ளார். எனவே தூய்மைபெறும் ஆன்மாக்களுக்கு உதவி செய்தல் பிறர்சிநேகத்தின் மிகச்சிறந்த செயல்பாடாகும்.

**எவ்வாறு உதவி செய்வது?**

திருப்பலி, செபமாலை, சிலுவைப்பாதை, திரித்துவ புகழ் செபங்களை பலமுறை செபித்தல், இறைவார்த்தையை வாசித்து ஒப்புக்கொடுத்தல், சின்னச் சின்ன ஒறுத்தல் முயற்சிகள் செய்து ஒப்புக்கொடுத்தல், புனித ஜெர்த்ரூத்துக்கு இயேசு கற்றுக்கொடுத்த செபத்தை பலமுறை செபித்து ஒப்புக்கொடுத்தல், ஏழைகளுக்கு உதவி செய்வதை ஒப்புக்கொடுத்தல் போன்றவற்றால் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்களுக்கு நாம் உதவி புரியலாம். இவை அனைத்தையும் அன்னை மரியாவின் வழியாக ஒப்புக்கொடுக்கும் போது, அவசர தேவையில் இருக்கும் ஆன்மாக்களுக்கு அன்னை மரியாள் பயன்படுத்திக்கொள்வார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்களுக்கு உதவி செய்து அவர்களை நமக்கு நண்பர்களாக மாற்றிக் கொள்வோம். கடவுளின் இரக்கத்தைப் பெறுவோம்.

மரியே! தூய்மைபெறும் ஆன்மாக்களின் அன்னையே! தூய்மைபெறும் ஆன்மாக்களுக்காக வேண்டிக்கொள்ளும்!



# பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 13

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவை துன்புறுகிறவர்களின் ஆறுதலே! என்று அழைக்கின்றோம். உண்மையிலேயே இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து, தாங்கள் செய்த பாவங்களுக்கும், சுத்த கருத்தில்லாமல் செய்த நற்செயல்களுக்கும், செய்யாமல் விட்ட நன்மைகளுக்கும் பரிகாரம் செய்வதற்காக தூய்மை பெறும் நிலையிலிருக்கும் (உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும்) ஆன்மாக்களின் துன்பங்களையும், அவர்களுக்கு அன்னை மரியாள் எவ்வளவு இரக்கமுள்ள தாயாக இருக்கின்றார்கள் என்பதையும் சிந்திக்க அழைக்கின்றேன்.

**உத்தரிக்கிற ஸ்தல ஆன்மாக்களின் வேதனைகள்:**

ஒருவர் கட்டியது தீக்கிரையாகுமானால் அவர் இழப்புக்குள்ளாவார். ஆனால் நெருப்பில் அகப்பட்டு தப்பியவர் போல் அவர் மீட்கப்படுவார். (1கொரி:3:15) என்றும், வேறுசிலரை அழிவுத் தீயிலிருந்து பிடித்திழுத்து காப்பாற்றுங்கள் (யூதா 1:23) என்றும் காணப்படுகின்ற இறைவார்த்தைகள் உத்தரிக்கிற ஸ்தலம் நெருப்பால் நிறைந்தது என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம். சகோதரி பவுஸ்தீனாவிடம் உத்தரிக்கும் ஆன்மாக்கள், 'கடவுளுக்கான தணியாத தாகமே எங்களுடைய மிகப்பெரிய வேதனை', என்று கூறியுள்ளனர். இயேசு புனித பவுஸ்தீனாவிடம், 'என்னுடைய இரக்கத்தை அல்ல: நீதியை நிறைவேற்ற வேண்டிய ஒரு இடமே உத்தரிக்கிற ஸ்தலம்' என்று கூறியுள்ளார். ஒரு நவதுறவி புனித காத்தரினின் கையைப் பற்றிக் கொண்டு, 'அம்மா! நாங்கள் வெந்துகொண்டு இருக்கிறோம்' என்று கூறியுள்ளார். இதிலிருந்து தூய்மைபெறும் நிலையிலுள்ள ஆன்மாக்கள் கடவுளை தற்காலிகமாக பிரிந்திருக்கும் வேதனையையும், நெருப்பில் வேகும் வேதனையையும் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

**உத்தரிக்கிற ஸ்தல ஆன்மாக்களின் எண்ணிக்கை:**

வணக்கத்துக்குரிய மேரி அன் லிண்ட்மெயருக்கு எறும்புக் கூட்டைப்பற்றிய தரிசனத்தை ஆண்டவர் காண்பித்து எண்ணற்ற ஆன்மாக்கள் தூய்மைபெறும் நிலையில் இருப்பதை விளக்கிக் காட்டினார். மேலும் விண்ணகத்தில் இருப்பார்கள் என்று நாம் நினைத்தவர்கள் பலர் தூய்மைபெறும் நிலையில் மறைந்து கிடக்கும் ஆன்மாக்களாக இருக்கின்றார்கள் என்பதையும் ஆண்டவர் அவருக்கு விளக்கியுள்ளார். மேலும் ஒரு பெண்ணின் ஆன்மா சகோதரியிடம் 'இவ்வுலகில் வாழும்போது பிறர் உங்களை ஒரு புனிதன் எனக் கருதுவதே ஒரு துன்பம் ஆகும். ஏனென்றால் உங்களுக்காக செபிக்க





# அன்னையின் 82 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## *அன்னை மரியாள் திருத்தலம், ஓரோபா பியெல்லா, இத்தாலி*

இத்தாலி என்றவுடன் நம் நினைவுக்கு வருவது இந்நாடு முழுவதும் சூழ்ந்து நிற்கும் மலைத் தொடர்களும் அவற்றின் வனப்பு நிறைந்த காட்சிகளாகும். அதிலும் குறிப்பாக வட இத்தாலியில் இருக்கும் ஆல்ப்ஸ் மலைத்தொடரை ஆண்டின் எந்த பருவத்தில் பார்த்தாலும் மனதிற்கு இதமாக இருக்கும். கோடை வெயிலில் இதமான தட்பவெட்பத்தை அனுபவிக்கவும், இயற்கையின் எழிலை வியந்தவாறு நடக்கவும், அப்பகுதியில் உள்ள மலை உச்சிகள், அவற்றின் மத்தியில் அமைந்திருக்கும் பள்ளத்தாக்குகளை பார்க்கவும் உலகின் பல பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர். அச்சுற்றுலா பயணிகள் அப்பகுதியில் உள்ள கலைநயமிக்க நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த அற்புத கட்டடங்களை கண்டு மகிழ்கின்றனர். இப்பகுதிகளில் உள்ள ஆலயங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கையும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இப்பகுதியில் உள்ள சிறிய நகரம் பியெல்லா ஆகும். இந்நகரத்தை ஒட்டிஅமைந்துள்ள மலைத்தொடரில் 1200 மீட்டர் உயரத்தில் ஓரோபா (Oropa) என்கிற இடம் உள்ளது. இத்தாலியின் கிழக்கு பகுதியிலிருந்து ஓஸ்தா பள்ளத்தாக்கிற்கு பயணிக்கிறவர்களின் பாதையில் ஓரோபா அமைந்துள்ளது. எனவே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் மலைகளில் ஏறி இவ்வழியே



பயணித்த வண்ணமாய் இருந்தார்கள் என்கிற செய்தி ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

யுசேபியுஸ் இத்தாலியில் உள்ள சர்தேங்யா (Sardegna) என்கிற தீவில் பிறந்தவர். இவரின் தந்தை வேதசாட்சியாக மரித்தவுடன் தன் தாய் மற்றும் சகோதரியுடன் உரோமை நகருக்கு வந்தார். திருத்தந்தை



மாற்கு அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர், கி.பி. 345 ஆம் ஆண்டு டிசம்பர் 15ம் நாள் அன்று திருத்தந்தை ஜூலியோ அவர்களால் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரை பற்றி புனித அம்புரோஸ் எழுதுகையில் தன்னுடைய மறைமாவட்டத்தில் குருக்கள் துறவிகளை போல குழுமமாக வாழ கட்டளையிட்டார் என்று எடுத்துரைக்கிறார்.

வடஇத்தாலியில் அமைந்துள்ள பியமோன்தே பகுதிக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை போதிக்கச் சென்றவர் புனித யுசேபியுஸ் (Saint Eusebio) ஆவார். இவர் வெர்ச்செல்லி நகரின் முதல் ஆயருமாவார். தன்னுடைய பணிக்காலத்தில் ஆரிய தப்பறை கொள்கைகளை (Arianism) கடுமையாக எதிர்த்தார். (இக்கொள்கைகள் ஆரியம் - திராவிடம் அல்ல) இத்தப்பறை கொள்கைகள் பற்றி பேரரசர் இரண்டாம் கொஸ்தான்சோவிடம் எடுத்துரைக்கவும், அதைப் பற்றி விவாதிக்க ஒரு திருச்சங்கத்தை கூட்டவேண்டும் என்கிற விண்ணப்பிக்க பேரரசரிடம், திருத்தந்தையால் இவர் அனுப்பிவைக்கப்பட்டார். ஆரிய தப்பறை கொள்கைகளைகளின் நிலைப்பாட்டை பேரரசர் கொண்டிருந்தாலும், திருச்சங்கத்தை கூட்ட ஏற்றுகொண்டார். இவற்றை விவாதிக்க கி.பி. 355ல் மிலான் திருச்சங்கம் கூட்டப்பட்டது. அதில் ஆரிய தப்பறை கொள்கைகளை கடைபிடிக்கும் ஆயர்கள் பெருமளவில் பங்கேற்றதால், யுசேபியுஸ் போன்ற பாரம்பரிய கொள்கைகளை கடைபிடிக்கும் ஆயர்கள் திருச்சங்க முடிவுகளில் கையெழுத்திடவில்லை. எனவே, யுசேபியுஸ் பாலஸ்தீனத்திற்கு நாடுகடத்தப்பட்டார். பேரரசர் இரண்டாம் கொஸ்தான்சோவின் இறப்புக்கு பிறகு பதவியேற்ற பேரரசர் ஜீலியானோ யுசேபியுஸ் நாடு திரும்ப அனுமதியளித்ததோடு, அவர் வேதபோதக பணியிலிருந்த பியமோன்தே பகுதிக்கே அனுப்பினார். ஆயர் யுசேபியுஸ், பாலஸ்தீனத்திலிருந்து திரும்பிய போது அங்கு வளர்ந்து கொண்டிருந்த கருப்பு அன்னையின் திருஉருவப்படத்தை





8-ம் பக்க தொடர்ச்சி.........

வெளிப்படுவதாகக் காண்கிறோம். அனைத்தும் குழந்தை இயேசுவின் உள்ளத்திலிருந்து ஆசிராகப் புறப்பட்டுச் சென்று இவர்களின் உள்ளங்களை நிறைக்கின்றது. இறை அருளில் நனைந்து, திளைத்து மகிழ்வில் காணப்படுகின்றனர். முதிர்ந்த இறைவாக்கினர்கள் இருவரும் ஆலயத்திலேயே தங்கியிருக்கின்றனர். இறைவேண்டலில் நிலைத்திருக்கின்றனர். நாம் தேடுகின்ற இறைவன் ஒரு நாள் இக்கோவிலுக்கு வருவார் என்ற எதிர்நோக்குடன் வாழ்ந்தனர். ஜூபிலி 2025 ஆம் ஆண்டில் நம்பிக்கையுடன் பயணிக்க அழைக்கப் படுகின்றோம். நாம் விசுவசிப்பதை அடைவோம், காண்போம் என்ற எதிர்பார்ப்பு. அதுதான் இந்த எருசலேம் ஆலயத்தில் உண்மையாகிறது. திருமுழுக்கு பெற்ற அனைவரும் இறைவனின் அன்புப் பிள்ளைகள். அவருக்கே சொந்தம். இவ்வுலகில் நாம் வாழ்வது, பயணிப்பது நிலையான ஒன்றை அடைவதற்காகவே. எனவே நாம் ஒவ்வொரு நாளும் அர்ப்பண மனநிலையுடன் வாழ்ந்து புனிதத்தை அடைய பயணத்தைத் தொடர்வோம். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் இந்நாளை துறவியரின் அர்ப்பண நாளாக சிறப்பிக்க அழைப்பு விடுத்தார். எனவே மூன்று வார்த்தைப்பாடுகளால் மக்களுக்கு இறையாட்சிப் பணிபுரிய இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்தோர் அனைவரும் இவ்வுலகில் மிகச் சிறப்பான வகையில் ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக வாழ இந்நாளில் உறுதி எடுப்போம்.

இறுதியாக, இயேசுவின் அர்பணித்தலில் அவரது பாடுகள் முன்னறிவிக்கப் படுகின்றன. இக்குழந்தை இயேசுவின் வித்தியாசமான போதனை, வாழ்வு அனைத்தும் அன்றைய அரசியல், சமயத் தலைவர்களுக்கு கோபத்தையும் வெறுப்பையும் ஏற்றியது. மக்கள் கூட்டம் இயேசுவை பின்தொடர்வதை ஆபத்தாகக் கருதினர். ஆனால் இயேசு தமது நேரம் வரும்வரை போதித்துக் கொண்டும், அரும் அடையாளங்களை ஆற்றிக் கொண்டும் எதிர்க்கப்படும் அறிகுறியாகவே வாழ்ந்தார். மரணத்தை எதிர்நோக்கிப் பயணம் செய்தார். மரியாவும் மீட்பின் திட்டத்தில் தனக்குரிய பங்கினை ஆற்ற ஆர்வமுடன், துணிவுடன், பணிவுடன் பயணித்தார். நிறைய வியாகுல வாள்கள் அவர் இதயத்தை ஊடுருவின. அமைதியாய் அனைத்தையும் தாங்கிக் கொண்டார். தம் அன்பு மகனோடு கல்வாரி மலை வரைப் பயணித்தார். உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்பவர்களுக்குத் துன்பங்கள் தவிர்க்க முடியாதவை. சோதனைகளும் வேதனைகளும் உடன் பயணிக்கின்றன. சிறிய பெரிய சிலுவைகள் தொடர்கின்றன. அவ்வப்போது கல்வாரி மலைக் குன்றில் ஏறி இறங்கிக் கொண்டு இருக்க வேண்டும். இதுதான் சாட்சி பகரும் வாழ்வு. இதற்காகவே நாம் திருமுழுக்கு பெற்றோம்.

**நிறைவுரை**

நமது அன்னை மரியாவின் நான்காவது திருப்பயணம் நம்மை ஆழ்ந்து சிந்திக்க அழைக்கின்றது. பல வகையானச் செய்திகளை சுமந்து வருகின்றது. ஜூபிலி ஆண்டை முன்னிட்டு நாம் பயணங்களில் ஈடுபடுகிறோம். அன்னையின் இந்த அழகிய பண்புகளை தியானித்தவர்களாகச் செல்வோம். பல வகையான நெருக்கடிகள் நிறைந்த உலகில் நலமான சிந்தனைகள், ஆரோக்கியமான உறவுகள், ஆழ்ந்த இறைவேண்டல்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றன. ஜூபிலி ஆண்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். இன்னும் சிறந்த முறையில் தயாரித்து ஜூபிலி ஆண்டின் அருள் வரங்களை நிறைவாய்ப் பெறுவோம். மரியா என்றும் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துவாராக!

2. இயேசுவின் பிறப்பின்போது மரியாவின் கன்னித்தன்மை
3. இயேசுவின் பிறப்புக்குபின் மரியாவின் கன்னித்தன்மை

***1. இயேசுவின் பிறப்புக்கு முன் மரியாவின் கன்னித்தன்மை***

"வானதூதரிடம் மரியா தான் கன்னி என்பதை பறைசாற்றுகின்றார் (லூக் 1:34, மத் 1:18)

***2. இயேசுவின் பிறப்பின்போது மரியாவின் கன்னித்தன்மை***

"ஆதலால் உன்னிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது" என வானத்தூதர் மரியாவின் கன்னித்தன்மையை உறுதிப்படுத்துகிறார். யூத முறைப்படி, குழந்தை பிறந்தவுடன் தூய்மைப்படுத்தும் சடங்கு செய்வதுண்டு (லேவி 12: 5, எசே 16: 6-9). ஆனால் இறையியல் கூற்றுப்படி இயேசுவின் பிறப்பில் ரத்த தீட்டு எதுவுமில்லை. வார்த்தையானவரின் பிறப்பில் ரத்தம் வெளிப்படவில்லை (யோவா: 1:13) கார்ல் ராணர் என்னும் இறையியலாளர் இவ்வாறு கூறுகிறார் "ஜென்ம பாவமின்றி உற்பவித்த, வார்த்தை மனுவுருவானவரின் தாயான மரியா, எல்லா பாவத்திலிருந்தும், பாவ நாட்டங்களிலிருந்தும் விடுபட்டிருப்பதால், அவரது குழந்தை பிறப்பின் ஒவ்வொரு அங்கமும் தனித்துவமிக்க, பிற பிறப்புகளிருந்து சற்று வேறுபட்ட, அருள் நிறைந்த மனித அனுபவமாகும்".

***3. இயேசுவின் பிறப்புக்குப்பின் அவரது கன்னித்தன்மை***

மரியா "எருசலேமின் வாயில்" என இறைவாக்கினர் எசேக்கியல் வர்ணிக்கிறார் (44:2). ரேய்மண்ட் பிரவுன் பின்வருமாறு கூறுகிறார் 'தூய ஆவியின் நிழல் பட்டதால் எந்த ஒரு மனிதனுக்கும் தனது கன்னித்தன்மையை அர்ப்பணிக்க மரியா முன்வரவில்லை' என அந்தியோக்கியாவை சேர்ந்த இந்நாசியார், மறைசாட்சியான ஜஸ்டீன், எரேனிமுஸ், ஆரிஜன் மற்றும் புனித எப்ரேம் போன்றோர் மரியாவின் கன்னித்தன்மையின் மறைபொருளை உலகிற்கு எடுத்துக் கூறிய திருஅவை தந்தையர்களாவர்.

***மரியா ஜென்ம பாவமின்றி உற்பவித்தவர்***

தூய வாழ்விற்கான அழைப்பை எல்லோருக்கும் இறைவன் வழங்குகிறார், ஆனால் மரியாவின் அழைப்பு சற்று வித்தியாசமானது. எனவே தான் மறைபொருள் எனப்படுகிறது "அருள்மிகு பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" (லூக் 1:28) எவரொருவர் பாவம் இன்றி வாழ்கின்றாரோ அவர்தான் இறையருளைத் தொடர்ந்து நிறைவாக பெற முடியும். 1439இல் மக்களின் விருப்பத்தினங்க, மரியாவின் பாவமின்மையை கோட்பாடாக அறிவிக்கக் கோரி பேசல் திருச்சங்கத்தின் வழியாக திருஅவை முயற்சி எடுத்தது. ஆனால் வெற்றிபெறவில்லை. 1854 டிசம்பர் 8ல் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் **"அமல உற்பவி"** என்ற கோட்பாட்டை அறிவிக்கின்றார்.

***மரியாவின் விண்ணேற்பு***

மரியாவின் பாவமில்லா வாழ்வு அவளை முடிவில்லா வாழ்வு நோக்கி நடத்தி செல்கிறது. மரியாவின் விண்ணேற்பானது கிபி மூன்றாம் நூற்றாண்டிலிருந்து மரியாவின் துயில் என்ற பெயரில் கிழக்கு திருஅவையில் கொண்டாடப்பட்டு வந்தது. கிபி 13ஆம் நூற்றாண்டில் இதனை கோட்பாடாக பரிந்துரைக்கப்பட்டது. கிபி 5 மற்றும் 6ஆம் நூற்றாண்டுகளில் உருவான திருமறை புற நூல்கள் மரியாவின் விண்ணேற்பு பற்றி நிறைய எழுதி இருக்கின்றன.

கிபி 6ஆம் நூற்றாண்டில் இருந்து யுடோசியா அரசி எருசலேமில் எழுப்பிய ஆலயத்தில் ஆகஸ்ட் 15ஆம் தேதி முதல் இத்திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவானது கிபி 7ஆம் நூற்றாண்டில் மேற்கு திருஅவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியாக திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் 1950இல் நவம்பர் 1ஆம் தேதி திருமடலில் இக்கோட்பாட்டை பிரகடனம் செய்தார்.

இவ்வாறு மரியாவின் வாழ்வு முழுவதுமே ஒரு மாறாத, மறையாத மறைபொருளாகவே இருக்கிறது. விசுவாசமே இம்மறைபொருளை வெளிச்சமிட்டு காட்டும் சூரிய ஒளியாக விளங்குகிறது. அவ்விசுவாச ஒளியோடு நமது வாழ்வு செல்லும்போது மறைப்பொருளின் முழு உண்மை புலப்படும். இவ்வுண்மை இறைவனையும் பிரதிபலிக்கும் பலமறைவுண்மைகளை மறைப்பொருளை உள்ளடக்கிய "ரோஜா மலரே" என்று மரியாவை புகழ்கின்றோம்.





கொண்டு வந்து பியெல்லா நகர் மலைத்தொடரின் ஓரோபா மலைகளில் இருந்த குகைகளில் ஒரு கோவிலை கட்டிய அதில் அந்த அன்னையின் திருஉருவப்படத்தை நிறுவினார். ஓரோபாவில் அமைந்துள்ள ஆலயத்தில் இன்றளவும் இருக்கும் கருமைநிற அன்னையின் (Black Madonna) திருஉருவமானது நற்செய்தியாளராகிய புனித லூக்காவினால் செதுக்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது. திருஅவையின் முதுபெரும் தந்தையர்களில் ஒருவரான யுசேபியுஸால் நிறுவப்பட்ட இந்த சிற்றாலயமானது காலப்போக்கில் வளர்ந்து இன்று விண்ணுயர்ந்த ஓரோபா அன்னை திருத்தலமாக திகழ்கிறது. இருந்த போதிலும், இத்திருத்தலத்தை பற்றி நமக்கு கிடைக்கும் வரலாற்று சான்றுகள் 13ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குகின்றன.



இங்கு கட்டப்பட்ட ஒரு சிற்றலாயத்தை, கி.பி. 1295 ஆம் பெப்ரவரி மாதத்தில் வெர்செல்லியின் ஆயரான அல்மோனே புனிதப்படுத்தினார். அதன்பிறகு, கி.பி. 1503ஆம் ஆண்டிலிருந்துதான் இந்த ஆலயத்தைப்பற்றிய வரலாற்று சான்றுகள் கிடைத்துள்ளன. கி.பி. 1599ஆம் ஆண்டு பியெல்லா நகரம் பெரும் கொள்ளைநோயால் தாக்கப்பட்டது. அவ்வேளையில், நகரம் கொள்ளை நோயிலிருந்து காப்பற்றப்பட்டால் ஒரேப்போவிலுள்ள ஆலயத்தை புதுப்பித்து கட்டுவதாக வாக்களித்து அன்னையின் பரிந்துரையை நாடிநின்றனர். பியெல்லா நகர் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டது. தங்களின் வாக்குறுதியை நிறைவேற்ற, யுசேபியு காலத்து சிற்றாலயத்தை புதுப்பித்து, மூன்று சாளரங்களை கொண்ட பெரிய ஆலயமாக கட்ட முடிவெடுத்தனர். இப்பணிகளை வெர்ச்செல்லி ஆயர்கள் ஸ்தேபனோ பெர்ரேரா மற்றும் ஜாக்கோமோ கோரியா செவ்வனே செய்து முடித்தனர். ஆலயம் ஓரளவு கட்டிமுடிக்கப்பட்ட நிலையில், அவ்வாலயத்தில் கருப்பு மரத்தால் செய்யப்பட்ட அன்னையின் திருஉருவத்தை நிறுவி, ஆலயமானது கி.பி. 1620 ஆம் ஆண்டில் ஆலயமும், அன்னையின் திருஉருவமும் அர்ச்சிக்கப்பட்டது. கி.பி. 1622ஆம் ஆண்டு இந்த ஆலமும், அதை சுற்றியுள்ள புனித இடங்களும் சவோயோவின் ஆட்சியாளராக இருந்த முதலாம் இம்மானுவேல் கார்லோ அவர்களால் தரிசிக்கப்பட்டு, பராமரிப்பு

செலவு முழுவதும் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரச செலவில் ஆலயத்தில் குருக்கள் செபிக்கும் இடமும், ஆலயத்தைச் சுற்றியுள்ள தாழ்வாரங்களுடன் உள்ள கட்டிட தொகுப்புகளை கட்டும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.



கி.பி. 1653ஆம் ஆண்டு கர்தினால் மௌரிசியோ, "போர்தோ கிராந்தே" என்கிற மிகப்பெரிய நுழைவு வாயிலை செய்யும் பணிகளை தன் சொந்த செலவில் தொடங்கினார். இப்பணிகள் ஏறக்குறைய 75 ஆண்டுகள் நடைபெற்றன. இறுதியாக, புகழ்பெற்ற கட்டிட கலைஞரான பிலிப்போ ஜீவாராவால் நிறைவுபெற்றன. இப்பணிகளின் நிறைவுற்றபோது அப்பகுதியின் பொருளாதாரமும் மேம்பட்டன. கி.பி. 17ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் அனைவரும் வியந்து பார்க்கும் வகையில், 1200 மீட்டர் உயரத்தில் இரண்டு சதுக்கங்களை கொண்ட கட்டிட தொகுப்புகள் ஏறக்குறைய நிறைவுபெற்றன. மலை உச்சியில் அமைந்திருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே இருந்தது. அதை கருத்தில் கொண்டு ஆலயத்தை பெரிதுபடுத்தி கட்ட விரும்பினர். ஆனால், பழமையான ஆலயத்தை இடிக்காமல் அப்படியே பராமரிக்கப்பட



வேண்டும் என்பதில் அனைவரும் ஒத்த கருத்துடையவர்களாய் இருந்தனர்.

எனவே, மற்றுமொரு புதிய ஆலயத்தை கட்ட முடிவெடுத்து, அதற்கான ஆலய வடிவமைப்பு படங்களை பல கட்டிட நிபுணர்கள் அளித்தனர். இறுதியாக, தூரின் நகரத்தை சார்ந்த பெர்னார்தோ அந்தோணியோ வித்தோனே என்பவரின் வரைபடமானது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், பணிகள் தொடங்கப்படவில்லை. ஆலய கட்டுமான பணிகளின் திட்டமானது மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, நியோகிளாசிக் கட்டிட கலைஞரான லூயிஜி கனினா அவர்களால் தொடங்கப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்ள பல்வேறு கட்டிடகலை நிபுணர்களை கொண்ட குழு நியமிக்கப்பட்டு, கி.பி. 1877ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆலயப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக





# மாதா மன்றாட்டு மாலை

23



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

*மறைப்பொருளைக் கொண்ட ரோஜா மலரே*

மரியா இறைவிருப்பத்தை வெளிப்படுத்துகிற ஒரு மறைப்பொருள் ஏனெனில் இறைவனே ஒரு மறைபொருள். எந்த ஒரு வசதி வாய்ப்பில்லாத முக்கியத்துவம் பெறாத நாசரேத் என்னும் குக்கிராமத்தில் பிறந்த மரியா அதிமுக்கியத்துவம் வாய்ந்த இறைவனுக்கே தாயாவது என்பது ஒரு மறைபொருளே. எளிமையின் உருவான மரியா விண்ணுலக இராணியாக உயர்த்து நிற்பது ஒரு மறைப்பொருளே. அன்றாட வாழ்வில் துன்பங்கள் நிறைந்த சூழலில் வாழ்ந்த மரியா பாவமற்றவளாகவும் பரிசுத்தமானவள் ஆகவும் இருந்து உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துச் செல்லப்படுவதும் ஒரு மறைபொருளே.

*வரலாற்று பிம்பம்*

"*மறைப்பொருளைக் கொண்ட ரோஜா மலரே*" எனும் இத்தலைப்பானது 1587 திருத்தந்தை 5ஆம் சிக்ஸ்த்துவால் அங்கீகரிக்கப்பட்டது. மலர்களுக்கெல்லாம் அரசியாக ரோஜா இருப்பதைப் போல புனிதர்களுக்கெல்லாம் அரசியாக மரியா திகழ்வதால் ரோஜா மலரோடு மரியா ஒப்பிடப்படுகிறார். மரியா அனைத்தையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்ததால் ரோஜா மலரோடு மரியா ஒப்பிடப்படுகிறார். ரோஜா மலரானது மறைப்பொருளின் அடையாளமாகவும் விளங்கியது, மரியா ஒரு மறைபொருள் என்பதை அவரது வாழ்வின் நான்கு முக்கிய பகுதிகள் படம்பிடித்து காட்டுகின்றன. அவை

1. மரியா இறைவனின் தாய்
2. மரியா என்றும் கன்னியானவர்
3. மரியா ஜென்ம பாவமின்றி உற்பவித்தவர்
4. மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவர்

எகிப்து நாட்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிபி மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே மரியா இறைவனின் தாய் என ஏற்று வாழ்ந்து வந்தனர். திருஅவை தந்தைகளில் ஒருவரான ஆரிஜன்(Origen) இக்கருத்தை முதன் முதலில் வெளிப்படுத்தினார். இக்கோட்பாடு முதலில் எபேஸ் திருச்சங்கத்தில் தான் (431) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அந்தியோக்கியா மற்றும் அலெக்ஸாண்ட்ரியாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் இத்திருச்சங்கத்தில் பங்கேற்றனர். 'இறை தன்மையும் மனித தன்மையும் தண்ணீர் மற்றும் எண்ணெய் போல இயேசுவில் தனித்தனியாக இருக்கின்றன' என்றும் மரியா மனிதத்தன்மை கொண்ட இயேசுவை மட்டும் தான் பெற்றெடுத்தார் எனவே மரியா கிறிஸ்துவை சுமந்தவர் என்றும் நெஸ்டோரியஸ் தலைமையிலான அந்தியோக்கியா குழு தங்கள் விவாதங்களை எழுப்பியது. மாறாக இறைத்தன்மையும் மனிதத்தன்மையும் தண்ணீரையும் பாலையும் போல இயேசுவில் இரண்டற கலந்து இருக்கின்றன என்றும் மரியா இரண்டு தன்மைகளையும் கொண்ட இயேசுவைப் பெற்றெடுத்தார் எனவே மரியா இறைவனின் தாய் என்றும் புனித சிரில் தலைமையிலான அலெக்ஸாண்ட்ரியா குழு தங்களது விசுவாசத்தை எடுத்துரைத்தது. திருஅவை இக்கூற்றை நியாயப்படுத்தி மரியா, "இறைவனின் தாய்" என அறிவித்தது. இக்கோட்பாடு கால்சிடோன் (451) திருச்சங்கத்தில் மறுஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

*மரியா என்றும் கன்னியானவர்*

இயேசுவின் இறைத்தன்மைக்கு அழுத்தம் கொடுத்திட மரியாவின் கன்னித்தன்மை ஒரு மறைபொருளாகவே இருக்கிறது. மரியாவின் கன்னித்தன்மையானது மூன்று முக்கிய பிரிவுகளை கொண்டது:

1. இயேசுவின் பிறப்புக்குமுன் மரியாவின் கன்னித்தன்மை



# இறையடியார் லூயிஜினா சினாபி (1916-1978)



அருட் பணி. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இறை அடியார் லூயிஜினா சினாபி இத்தாலியின் உரோமை நகருக்கு அருகில் உள்ள இட்ரி என்ற இடத்தில் செப்டம்பர் 8, 1916 அன்று பிறந்தார். செல்வந்த குடும்பத்தில் பிறந்த அவர் ஐந்து குழந்தைகளில் மூத்தவராக இருந்தார். குழந்தைப் பருவத்திலேயே, அன்னை மரியாள், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பற்றிய காட்சிகள் லூயிஜினாவுக்கு ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. இது அவரது அன்னையை மிகவும் கலக்கமடையச் செய்தது. இதனால் அவர் 1920களில் தம் மகளை புனிதர் பாதர் பியோ அவர்களிடம் அழைத்துச் சென்றார். இதுவே பாதர் பியோவோடு லூயிஜினாவுக்கு நாளடைவில் நெருக்கமான தொடர்பு ஏற்படத் தொடக்கமாக அமைந்தது. நவம்பர் 1931இல் லூயிஜினாவின் அன்னை இறந்துவிடவே, தன் இளைய சகோதர சகோதரிகளைப் பராமரிக்கும் பொறுப்பை லூயிஜினா ஏற்றார். சில ஆண்டுகளுக்குப் பிறகு, இளம் பெண்ணான லூயிஜினாவுக்கு மூளையில் கட்டி ஒன்று இருப்பது மருத்துவர்களால் கண்டறியப்பட்டது. மரணத்தின் விளிம்பில் இருந்த அவருக்கு நோயில் பூசுதல் அளிக்கப்பட்டது. இதன்மூலம், ஆகஸ்ட் 15, 1935 அன்று, இயேசு மற்றும் மரியா அவர்கள் தோன்றி அதிசயமாக அவரை நலமடையச் செய்தனர். தம் வாழ்நாள் முழுவதும், லூயிஜினா ஒரு சாதாரண திருச்சபைப் பணியாளராகப் பணியாற்றினார். அவர் பல்வேறு பணிகளில் ஈடுபட்டார்: 1936 முதல் 1940 வரை புள்ளியியல் நிறுவனத்தில் ஒரு ஊழியராகப் பணிபுரிந்தார். அதன் பின்னர், காசாளர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்தார். ஏப்ரல் 1937இல், உரோமையில் மூன்று நீரூற்றுகள் அருகில் உள்ள வழிபாட்டுத் தலத்திற்கு அருகிலுள்ள ஒரு குகையில், லூயிஜினாவுக்கு அன்னை மரியாள் தோன்றி, திருத்தந்தையாக பன்னிரண்டாம் பத்திநாதர் தேர்வு செய்யப்படுவார் என்று தெரிவித்தார். இந்தத் காட்சிக்கு பிறகு, லூயிஜினா அன்னை மரியாளின் அறிவுரைப்படி, இன்னும் கர்தினாளின் சகோதரியைச் சந்தித்தார். அன்னை மரியாளின் முன்னறிவிப்பை அவர் அச்சகோதரிக்குத் தெரிவித்தார். அதன்படியே திருத்தந்தையாக பன்னிரண்டாம் பத்திநாதர் தேர்வு செய்யப்பட்டார். 1940ஆம் ஆண்டில், தனது சொந்த ஊரில் திருத்தலத்தில், மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக ஒரு தொண்டு நிறுவன அமைப்பை லூயிஜினா நிறுவினார். 1950ஆம் ஆண்டில், மரியாவின் விண்ணேற்றக் கோட்பாட்டை (Dogma of the Assumption) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் முன்பு, பன்னிரண்டாம் பத்திநாதர் மற்றும் லூயிஜினா சந்தித்தனர். ஒரு காட்சியில் அன்னை மரியாள் இக்கோட்பாட்டிற்கு தமது ஒப்புதலைத் தெரிவித்ததாக லூயிஜினா பன்னிரண்டாம் பத்திநாதரிடம் கூறினார். லூயிஜினா ரோமுக்குக் குடிபெயர்ந்து, பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையின் உறுப்பினரானார். 1954இல் மரியின் ஊழியர் மூன்றாம் சபையின் உறுப்பினராகவும் ஆனார். பின்னர், அறிஞரான பேராசிரியர் என்ரிகோ மெடி அவர்களின் செயலாளராகப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். நமது அருட்தந்தை ர.ஃ.பேலே பிரெய்ட் OSM அவர்கள் லூயிஜினாவின் ஆன்மீக வழிகாட்டியாக இருந்தார். ஏப்ரல் 17, 1978 அன்று ரோமில் லூயிஜினா மரணமடைந்தார். மே 22, 2009 அன்று, அவரை புனிதர் பட்டமளிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்கினார்கள்.





ஓரோபா நீரோடையிடன் வழித்தடமானது மாற்றப்பட்டு, கி.பி. 1885ஆம் ஆண்டு ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலயப் பணிகளை பொறியாளர் ஜியோவான்னி பத்திஸ்தா பேரான்தே தலைமையில் தொடங்கப்பட்ட பணிகள் இரண்டு உலகப் போர்களுக்கு இடையில் கடுமையான பொருளாதார சிக்கல்களை மேற்கொண்டு பல ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றது. இறுதியாக, முழுமை பெற்ற ஆலயமானது கி.பி. 1960ஆம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்டது.



இப்புதிய ஆலயத்தின் மையக் கோபுரமானது 30மீட்டர் விட்டம் கொண்டதாக கட்டப்பட்டது. இந்த ஆலயத்தில் ஒரே நேரத்தில் 3,000 அமர்ந்து வழிபாடுகளில் பங்கேற்க முடியும். ஆலயத்தின் மேற்கூரை முழுவதும் கண்கவரும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவ்வோவியங்களின் சிறப்பு என்னவென்றால், அவை அனைத்தும் கண்டுணர கூடிய மரியியல் பாடங்களாக பின்வரும் தலைப்புகளில் அமைந்து உள்ளத்தை கவர்வதாக உள்ளது: மரியான் தாவீதின் வழித் தோன்றல், மரியாவின் அமலஉற்பவம், என்றும் கன்னியான மரியா, மரியாள் கடவுளின் தாய், அன்னையின் விண்ணேற்பு மற்றும் மரியாள் இணைமீட்பர். இவ்வோவியங்களில் நான்கு திருஅவை போதிக்கும் அன்னை மரியாவை பற்றிய கோட்பாடுகளாக அமைந்துள்ளது சிறப்பம்சமாகும்.

இயற்கையோடு பிண்ணிப்பிணைந்து, தூய்மையான காற்று, ஆரோக்கியமான சூழல், அமைதியில் இறைவனின் பிரசன்னத்தை உணர்த்தும் இந்த அன்னை மரியாவின் திருத்தலத்திற்கு செல்ல தங்களோடு என்னையும் இணைத்து கொண்ட திருவாளர் கண்ணன், திருமதி ஹேமா மற்றும் குழந்தைகளுக்கு என் மனமார்ந்த நன்றிகள். இறைவன் அவர்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**திருப்பயணம் தொடரும்...........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருப்பாடல்கள் 99-115



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 3 |
| | 8 | | | | | | | 7 | |
| | | 12 | | | | | 11 | | |
| | | | 15 | | | 14 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 13 | | | |
| | | 9 | | | | | 10 | | |
| | 5 | | | | | | | 6 | |
| 1 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

2) யூதா அவருக்குத் ________ ஆயிற்று; இஸ்ரயேல் அவரது ஆட்சித்தளம் ஆனது.
3) _________ குலத்தாரே! ஆண்டவா் மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள்; அவரே உங்களுக்குத் துணையும் கேடயமும் ஆவார்.
6) 'மெல்கிசெதேக்கின் முறைப்படி நீா் என்றென்றும் __________' என்று ஆண்டவா் ஆணையிட்டுச் சொன்னார்; அவா் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்.
7) மாசற்ற வழியில் நடப்பதில் நான் கருத்தாயிருக்கிறேன்; எப்பொழுது நீா் என்னிடம் __________? தூய உள்ளத்தோடு என் இல்லத்தில் வாழ்வேன்.
10) அவற்றைச் செய்கின்றோரும் அவற்றில் ____________ கொள்ளும் அனைவரும் அவற்றைப் போல ஆவர்.
11) மனித உளத்திற்கு மகிழ்ச்சியூட்டத் திராட்சை இரசமும், முகத்திற்குக் களையூட்ட எண்ணெயும் மனித உள்ளத்திற்குப் புத்துணா்வூட்ட ___________ அளிக்கின்றீா்.
13) அவை ___________. விலங்குகள் அனைத்திற்கும் குடிக்கத் தரும்; காட்டுக் கழுதைகள் தாகத்தைத் தீா்த்துககொள்ளும்;

**இடமிருந்து வலம்**

1) ஆண்டவரே! நீா் என்றென்றும் கொலுவீற்றிருக்கின்றீா்; ஆண்டவரது புகழ் எவ்வாறு நிலைத்திருக்கும்.?
4) __________ மீது உமது உறைவிடத்தின் அடித்தளத்தை அமைத்துள்ளவா்; காா் முகில்களைத் தேராகக் கொண்டுள்ளவா்; காற்றின் இறக்கைகளில் பவனி வருகின்றவா்!





ஒன்றுக்கொன்று நட்போடு இருக்கும் என்றும் கூறுகிறார். இத்தகைய கனவு வாழ்வை செயலாக்க கிறிஸ்து உங்களை ஏற்றுக் கொண்டது போல நீங்களும் ஒருவரை ஒருவா் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுக்கிறாா் பவுல். நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் மனமாற்றத்தை நம்மிடையே எதிா்பாா்க்கின்றாா். அந்த மன மாற்றத்தை செயலில் காட்ட சொல்கிறாா். எவ்வாறு இயேசு பிறரன்பு கொண்டு யாரையும் தீா்ப்பிடாமல் ஆறுதல் அளித்து குணமளிக்கும் மருந்தாய் விளங்கினாரோ அதேபோல நாமும் இயேசுவின் வாழ்வை நமதாக்கி பிரதிபலித்தால் நம் குடும்பங்களில் உறவுகளில் தவறுகள் சீரபடும். அமைதியையும் அன்பையும் நிலைநாட்டும் போது அங்கே ஆண்டவா் இயேசு கிறிஸ்து பிறக்கிறாா். கிறிஸ்துவின் வருகையை திருமுழுக்கு யோவான் ஆயத்தமாக்கியதை போல கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு நாமும் ஆயத்தமாக இத்திருப்பலியில் பக்தியோடு பக்கெடுப்போம்.

***முதல் வாசக முன்னுரை*** (எசாயா 11:1-11)

இறை இயேசுவில் பிரியமுள்ளவர்களே இன்றைய முதலாவது வாசகம் இறைவாக்கினா் எசாயா நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவரின் ஆவி நம்மோடு இருக்கும்போது நாம் எல்லாவற்றிலும் சிறந்தவராக இருப்போம் என்ற உன்னதமான அழைப்பை விடுப்பதோடு மட்டுமல்லாமல் நாமும் நம்முடைய வாழ்வை வெறும் வாா்த்தையால் மட்டும் அல்லாமல் தூய ஆவியின் வல்லமையோடு வாழ அழைப்பு விடுக்கும் வாா்த்தைக்கு கவனமுடன் செவி மடுப்போம்.

***இரண்டாம் வாசக முன்னுரை*** (உரோமையர் 15:4-9)

இறை இயேசுவின் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே இன்றைய இரண்டாவது வாசகம் புனித பவுல் அடிகளாா் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிக்கு ஏற்ப ஒரே மனத்தவராய் இருக்குமாறும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் ஒருவா் மற்றவரை புரிந்து கொண்டு கிறிஸ்துவின் மதிப்பீடுகளின் படி வாழ வளர அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

***மன்றாட்டுகள்***

1. எங்களைப் படைத்தாளும் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரையும் ஆசீா்வதியும். தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப தங்கள் திருப்பணிகளைத் திறம்படச் செய்ய தேவையான அருளைத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உம் பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் பாவ வாழ்க்கையை விட்டு விட்டு உம்முடைய அழைப்பை ஏற்று நல்லதொரு மனமாற்றம் பெற்று வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்
3. குடும்பத்தின் தலைவரே இறைவா, திருமணம் என்னும் அருட்சாதனம் பெற்று குழந்தை வரத்திற்காக பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் தம்பதியா்களை ஆசீா்வதியும். அவா்கள் மீது இரக்கமும் பரிவும் கொண்டு குழந்தை செல்வத்தைக் கொடுத்து குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்ப வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. நல் மருத்துவரே இறைவா, தொற்று நோயினாலும், உயிா்க்கொல்லி நோயினாலும் பாதிக்கப்பட்டோரை ஆசீா்வதியும். மருத்துவா்கள் வழியாக நீா்தாமே அவா்களைக் குணப்படுத்தி உடல் சுகம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

*முதல் வாசக முன்னுரை* (எசாயா 2:1-5)
இறைவாக்கினர் எசாயா, எருசலேம் இறைவனின் இல்லமாக உயர்ந்து, அனைத்து நாடுகளும் அமைதி மற்றும் நீதிக்காக அதனிடம் வரும் காலத்தைப் பற்றிப் முன்னறிவிக்கிறார். அது போர்க்கருவிகள் கலப்பைகளாக மாற்றப்படும் காலத்தைப் பற்றி பேசுகிறது. இதன் மூலம், நமது இதயங்களை அமைதி மற்றும் நீதியின் பாதைக்கு மாற்றி, இறைவனின் வருகைக்காக நம்மைத் தயார் படுத்திக்கொள்ள இன்றைய வாசகம் நம்மை அழைக்கிறது.

*இரண்டாம் வாசக முன்னுரை* (உரோமையர் 13:11-14)
திருத்தூதர் பவுல், கிறிஸ்துவோடு புதிய வாழ்வைத் தொடங்கி, இருளின் செயல்களை விலக்கி, ஒளியின் செயல்களைச் செய்ய நமக்கு அறிவுறுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கிவிட்டதால், விழித்திருந்து, தீய பழக்கங்களைத் தவிர்த்து, நம்பிக்கையோடு வாழ இந்த வாசகம் நம்மை தூண்டுகிறது. இறைவனின் அமைதி நிறைந்த ஆட்சி வரவிருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, அதற்காக விழித்திருந்து, நம்மைத் தயார் படுத்திக்கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கும் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

*மன்றாட்டுகள்*
1. அமைதியின் அரசே எம் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார், பொதுநிலையினர் அனைவரும் நிறைவாக ஆசீர்வதித்து ஜெபம், தவம் செய்து உள்ளத்தை அன்பின் இல்லமாக மாற்றி மக்களை அமைதியின் வழியில் நடத்த எமது ஆற்றலை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. இறைவா! நாட்டை வழிநடத்தக் கூடிய அரசியல் தலைவர்களை உமது கரத்தில் அர்ப்பணிக்கின்றோம். தாங்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு திட்டங்களும் மக்களுக்கு விரைவாக செல்கிறதா என்று கவனிக்கும் நல்ல தலைவர்களாக இருக்கவும் சுயநலம் இல்லாமல் வாழவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அக மகிழ்வோடு ஆண்டவர் இல்லத்திற்கு போவோம் என்ற திருப்பாடல் வரிகளுக்கு ஏற்ப பங்கில் உள்ள எல்லா குடும்பங்களையும் ஒப்புக்கொடுக்கின்றோம். திருவருகை காலம் முதல் வாரத்தில் இருக்கின்ற நாங்கள் கிறிஸ்து உள்ளத்தில் பிறக்க அவரின் பண்பு நலன்களை கடைபிடித்து நல்ல கிறிஸ்தவ குடும்பங்களாக மாற உமது ஆசீரை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. இமைப்பொழுதும் நீங்காத ஆண்டவரை! என் பங்கில் உள்ள இளையோர் அனைவரும் கணினி உலகத்தில் ஆன்மாவை தொலைத்து விடாமல் மெய்யான இறைவனாகிய உம்மில் நம்பிக்கை கொண்டு வாழ வரம் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு
### (07.12.2025)

இறை இயேசுவின் அன்பார்ந்த இறைமக்களே இன்று நாம் திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். முதல் வாசகம் நீதியுள்ள அரசரை பற்றி கூறுகிறது. தாவீது குலத்தின் வேரிலிருந்து ஒரு அரசர் பிறப்பார் என்று தீர்க்கதரிசனமாக எசாயா உரைக்கின்றார். கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் கொண்டு நீதி வழங்காமல் நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குபவராக இருப்பார் என்றும் அவரது ஆட்சியில் எதிர்துருவங்களாக இருக்கும் அனைத்தும்





5) யாருடைய துணையால் வீரத்துடன் போரிடுவோம்; அவரே நம் எதிரிகளை மிதித்துவிடுவார்.?
8) வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் _________ ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.
10)மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ; அத்துணைத் தொலைவிற்கு யாருடைய குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார்.?
15) ஆண்டவரின் வலிமைமிகு செயல்களை யாரால் ___________ இயலும்? அவர்தம் புகழை யாரால் விளம்பக்கூடும்?

**மேலிருந்து கீழ்**
3) அவரின் ஊழியராம் யாருடைய வழிமரபே!? அவர் தேர்ந்து கொண்ட யாக்கோபின் பிள்ளைகளே!
4) அல்லேலூயா! நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்; எவர்களுடைய மன்றத்திலும் சபையிலும் அவருக்கு நன்றி செலுத்துவேன்.?
7) ஏழைகளைத் தூசியிலிருந்து அவர் தூக்கி நிறுத்துகின்றார்; யாரைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகின்றார்;?
8) நாட்டில் நம்பிக்கைக்குரியோரைக் கண்டுபிடித்து என்னோடு வாழச்செய்வேன்; நேரிய வழியில் நடப்போரை எனக்குப் ___________ புரியச் செய்வேன்;
11) நீர் உமது முகத்தை மறைக்க, அவை திகிலடையும்; நீர் ___________ மூச்சை நிறுத்திவிட்டால், அவை மாண்டு மறுபடியும் புழுதிக்கே திரும்பும்.
12) காலங்களைக் கணிக்க நிலவை நீர் அமைத்தீர்; யார் தான் மறையும் நேரத்தை அறிவான்?
13) _____________ நாட்டில் அவர் செய்த வியத்தகு செயல்களை மறந்தனர்; செங்கடலில் அவர் செய்த அச்சுறுத்தும் செயல்களையும் மறந்தனர்.
14) அவனுக்கு உரியவற்றை எல்லாம் கடன் கொடுத்தவன் பறித்துக் கொள்ளட்டும்! அவனது உழைப்பின் எதை அன்னியர் கொள்ளையடிக்கட்டும்!?
15) அவர் தம் திருப்பெயரை மாட்சிப்படுத்துங்கள்; ஆண்டவரைத் தேடுவோரின் __________ அக்களிப்பதாக!

**கீழிருந்து மேல்**
1) யார் தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவது போல் ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார்.?
2) நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள்; அவரது திருமலையில் அவரைத் தொழுங்கள். ஏனெனில், நம் கடவுளாகிய ஆண்டவரே ____________
5) அல்லேலூயா! ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர்; அவர்தம் எவைகளில் அவர்கள் பெருமகிழ்வு அடைவர்.?
9) தலைவர்கள் மேல் இகழ்ச்சியைக் கொட்டி, அவர்களைப் பாதையற்ற ______ வெளியில் அலையச் செய்தார் அவர்.
10) நன்றியோடு அவர்தம் திருவாயில்களில் நுழையுங்கள்! புகழ்ப்பாடலோடு அவர்தம் முற்றத்திற்கு வாருங்கள்! அவருக்கு _________ செலுத்தி, அவர் பெயரைப் போற்றுங்கள்!

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-11-2025**

# மீட்புப் பயணம்



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

ஆதாம் ஏவாள்
ஆதாம் ஏவாள் கதைமாந்தர் இருவர்
ஆதியானவர் வடித்த கதாநாயகர்கள் இவர்கள்
காற்றும் கடலும் கானும் எவையும்
கட்டுக்குள் வைக்கும் தீரர் இவர்கள்

அழகிய வனம் அற்புத வனம்
பசியே காணாத பசுமை வனத்தை -கடவுள்
பரிசாய் அளித்தார் வசித்திட கொடுத்தார்
கனியும் நீரும் சுவைத்திட அளித்தார்

அதிசயம் படைத்து அனைத்தையும் கொடுத்து
வனத்து நடுவிலே சிறுமரத்தையும் விடுத்தார்
நன்மை தீமை அறிந்திடும் அம்மரத்தின்
பழத்தினை மட்டும் விலக்கிட விதித்தார்

மாந்தர் இருவரும் முறைப்படி நடந்தனர்
வேந்தர் கடவுளின் சொற்படி புரிந்தனர்
அற்பன் அலகைக்கு இவையெல்லாம் கடித்தது
சற்பன் வடிவிலே குலைத்திட துடித்தது.

ஏவாள் ஒருநாள் தனியே அமர்ந்தாள்
எப்படியோ அலகை அதனை உணர்ந்தான்
பாம்பு வடிவிலே தன்னை கொணர்ந்தான்
பாவம் புரிந்திட தர்க்கம் மொழிந்தான்

வேச சந்துவின் பேச்சுக்கு இணங்கி
மோசம் ஆக்கிடும் கனியினை சுவைத்தாள்
நாசம் ஆனது தான்மட்டும் அல்லாது
பாசம் ஆகின ஆதாமுக்கும் கொடுத்தாள்

கடவுள் கடிந்து வனத்தை அடைத்தார்
வனத்து சுகத்தின் வாசம் மறுத்தார்
துன்பம் துயரம் சாபம் நுழைந்தார்
மரணம் இறுதி எல்லையாய் அமைத்தார்

அதுமுதல் தீவினை மேலோங்கி வளர்ந்தது
ஆதியார் மனமோ தீயாக எரிந்தது
பாவம் நுழைந்திட காரணம் இவர்கள்
பாவம் கழுவிட யார்இனி வருவார்





அனைத்து எதிரிகளையும் தோற்கடிப்பார். கடவுளிடம் ஆட்சி உரிமையை ஒப்படைப்பார் என்றும், அவர் குறிப்பிடுகிறார். எனவே கிறிஸ்துவே பேரரசர் என்பதை விளக்கும் இந்த வாசகத்தைக் கவனிப்போம்.

***மன்றாட்டுகள்***

1. அன்பின் இறைவா! எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவரத்தார் அனைவரும் இறுதிவரை உம்மில் நிலைத்திருந்து பலன் கொடுக்கவும் மக்களை நம்பிக்கையின் பாதையில் வழிநடத்த தேவையான அருள் வரங்களை வழங்கிட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. நானே நல்ல ஆயன்! என்று மொழிந்த இறைவா என் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் தன்னலம் இன்றி மக்கள் நலனில் அக்கறை கொண்டு வாழ்ந்திடவும் ஏழைகள் வாழ்வு வளம் பெறுவதற்கு தேவையான சட்டங்களை கொண்டு வந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. எம்மை விட்டு நீங்காத ஆண்டவரை! எம் பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களிலும் நம்பிக்கையும் அன்பும் வளர்ந்திடவும் எத்தகைய சூழ்நிலையிலும் மனம் தளராது ஜெபிக்கவும் தேவையான நல்ல மனதை எங்களுக்கு தந்து காத்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. எம்மோடு பயணிக்கும் ஆண்டவரே! நாங்கள் கிறிஸ்துவை எங்கள் வாழ்க்கையால் அறிவிக்கவும் ஜெபத்தில் நிலைத்திருக்கவும் வாழ்வு தரும் வார்த்தையை அன்றாடம் படிக்கவும் வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### திருவருகைக்காலம் முதல் ஞாயிறு (30.11.2025)

இறையன்பர்களே! ஆண்டின் பொதுக்காலங்களை முடித்து இன்று திருவருகைகால முதல் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இன்றைய வாசகங்கள் இறைவனிடம் நெருங்கி செல்ல அழைப்பு விடுக்கிறது. அனைத்து மக்களும் எருசலேமுக்கு சென்று ஆண்டவரின் வழிகளை பின்பற்றுவார்கள் என்றும் யாவரும் ஆண்டவரிடம் திரும்பி வருவதையும் அவர் நெறிகளில் நடக்கவிருப்பதையும், சண்டையிடமாட்டார்கள் என்பதையும் காட்சியாக எசாயா காண்கின்றார். இஸ்ரயேல் வழியாக கடவுளின் அரசாட்சி உலகெங்கிலும் உள்ள மக்களை சென்றடையும் என்று முதல் வாசகம் கூறுகிறது. மீட்பு நெருங்கி விட்டதால் விசுவாசிகள் தங்கள் புதிய அடையாள வாழ்க்கையை வாழ வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகின்றார். தீய செயல்களை கைவிட்டு நீதியான வாழ்க்கையின் செயல்களில் ஈடுபட்டு இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ள இரண்டாம் வாசகம் அழைப்பு விடுக்கிறது. நோவாவின் காலத்தில் திடீரென வெள்ளம் வந்து அழித்தது போலவே மானிட மகன் வரும்போதும் அழிவு இருக்கும் என்று எச்சரிக்கின்றார் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. யாரும் கணிக்க முடியாத நேரத்தில் மானிடமகனின் வருகை இருக்கும் என்றும் எந்நேரமும் ஆயத்தமாக இருங்கள் என்றும் சொல்கிறார். நம் முடிவு எப்போது வரும் என்பதில் நாம் நேரம், சக்தி இவைகளை செலவிடாமல், நம் முடிவு எப்படி இருக்க போகிறது அல்லது எப்படி இருக்க வேண்டும் என்று சிந்தித்தால் பயன் உண்டு. எனவே நாம் எப்பொழுதும் நல் மதிப்புகளை கடைப்பிடித்து இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தம் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

ஆன்மீகத்தில் வளர்ந்து தனக்கு வரக்கூடிய தீமையான செயல்பாடுகளில் ஈடுபடாமல் நன்மையான காரியங்களில் ஈடுபட்டு சிறப்பான வாழ்வு வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 34ஆம் ஞாயிறு (23.11.2025)

கிறிஸ்துவில் இனியவர்களே! ஆண்டின் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறான இன்று தாய் திரு அவையானது கிறிஸ்து அரசர் பெருவிழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவர் தம் மக்கள் இஸ்ரயேலை வழிநடத்தி செல்ல தாவீது அரசனுக்கு திருப்பொழிவு செய்கின்றார் என்றும், இரண்டாம் வாசகத்தில் அனைத்துமே அவரால் படைக்கப்பட்டது எல்லாமும் அவருக்காகவே படைக்கப்பட்டன என்றும், இயேசுவின் இரத்தத்தால் எல்லாம் தம்மோடு ஒப்புரவாக இறைவன் திருவுளம் கொண்டார் என்றும் கூறுகிறது. நற்செய்தியில் இயேசு காட்டிக் கொடுக்கப்பட போகிறதை உணர்ந்து தனது சீடர்களை எச்சரித்து ஜெபிக்க சொல்கிறார். துன்பம் தன்னை நெருங்குவதை கண்டு இறைவனிடத்தில் தன் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார். இயேசு யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார், அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது என்று வானத்தூதர் வழியாக ஆண்டவர் அன்னை மரியாவுக்கு உரைத்தது இயேசுவின் வாழ்வில் எல்லாம் எதிர்மறையாகவே நடந்தது.

பெத்தலகேம் மாட்டு தொழுவத்தில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்து, நற்செய்தியை போதித்து அலைந்து, இறுதியிலே சிலுவை சாவுக்கு எருசலேமிலே கையளிக்கப்பட்டார். அரச மகுடத்தை தொட்டுப் பார்த்ததில்லை, மாளிகைக்குள் நுழைந்ததும் இல்லை, அரியணையில் ஒரு நிமிடம் கூட அமர்ந்ததில்லை ஆனால் இன்றைக்கு நம் இதயங்களிலேயே அரசராக வைத்திருக்கின்றோம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அரசு உண்மையின் அரசு, நீதியின் அரசு, அன்பின் அரசு இப்படிப்பட்ட அரசரின் மக்களாக நிலைத்திருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

*முதல் வாசக முன்னுரை* (2சாமுவேல் 5:1-3)
இன்றைய முதல் வாசகம் இஸ்ரேயல் மக்களை நல்வழியில் வழிநடத்தாத தலைவர்களைக் கடிந்து கொள்ளும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த வாசகத்தில் கடவுளே நம் மக்களை காக்கும் நல்லாயன் என்று கூறுகிறார். மேய்ப்பன் தன் மந்தையை கவனித்துக் கொள்வது போல கடவுளும் தம் சிதறிப்போன மக்களை சேகரித்து பாதுகாத்து புல்வெளியில் இளைப்பாறச் செய்வார் என்று உறுதி அளிக்கிறார். தம் மக்களுள் நல்லவற்றையும் தீயவற்றையும் அவர் பிரித்தறிவார் எனவும் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவே நல்லாயன் என்னும் கருத்தை முன்னறிவிக்கும் முதல் வாசகத்திற்கு செவி கொடுப்போம்.

*இரண்டாம் வாசக முன்னுரை* (கொசலோசேயர் 1:12-20)
இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் கிறிஸ்துவின் உயிர்ப்பே அனைத்துக்கும் அடித்தளம் என்று வலியுறுத்துகிறார். கிறிஸ்து சாவில் இருந்து உயிர்த்தெழுந்தார். இதன் மூலம் நம்பிக்கை கொண்டோரும் ஒருநாள் உயிர்த்தெழுவர் என்பதை உறுதி செய்கிறார். கிறிஸ்து இறப்பை கடந்த வெற்றியாளர் என்றும், இறுதி நாளில்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்

### பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு (09.11.2025)

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே இன்று நாம் பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய இறைவார்த்தை வழிபாடு உடலாகிய ஆலயத்தை காத்துக் கொள்ள அழைப்பு விடுக்கிறது. கர்வத்தாலும், பெருமையாலும் கடவுளின் செயல்களை புறக்கணித்ததால் பாபிலோன் வீழ்ந்தது என்பதை குறித்துக் கூறுகிறது. பாபிலோன் மக்களை துன்புறுத்தியதால், கடவுள் அவர்களுக்கு தண்டனை அளிக்கிறார், மேலும் அவர்கள் தங்கள் பெருமையை விட்டு விட்டு சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப சொல்கிறார். இரண்டாம் வாசகத்தில் நாம் அனைவரும் கடவுளின் கோவில், அதில் ஆவியானவர் குடியிருக்கின்றார் என்றும் அக்கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்து விடுவார் என்றும் பவுல் கூறுகிறார். ஏசாயா 56:7 இறைவார்த்தையில் ஆண்டவர் சொல்கிறார், என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் இறை மன்றாட்டின் வீடு. எரேமியா 7:11 இறை வார்த்தையில் நீங்கள் இதை உங்கள் பார்வையில் கள்வர்க்குகையாக்கிவிட்டீர்கள் என்கிறார். இதை இரண்டையும் எடுத்து இயேசு இங்கு எருசலேம் கோவிலில் நடக்கக்கூடிய சந்தை கலாச்சாரத்தை, வியாபாரத்தை கண்டு கோபமுற்று அடித்து துரத்தி இக்கோவிலை இடித்து விடுங்கள் மூன்று நாளில் கட்டி எழுப்புவேன் என்கிறார். தம் உடலாகிய கோவிலை தான் அப்படி சொன்னார். நம் உடல் கடவுளின் கோவில் என்பதை எப்போதாவது உணர்ந்திருக்கின்றோமா? எவ்வாறு அதன் பரிசுத்தத்தை காத்துக் கொள்கின்றோம்? ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சமம் என்பதை உணர்ந்து நடக்கின்றோமா? நவீனம் என்று சொல்லி அரைகுறை ஆடை அணிவதிலும் கெட்ட கெட்ட பழக்க வழக்கங்களினாலும், நடத்தைகளினாலும் உடலின் பரிசுத்தத்தை இழந்து வருகிறோம். கடவுளை புறக்கணிக்காமல் நாம் அனைவரும் அவரின் கோவில் என்பதையும் தூய ஆவி குடிகொள்ளும் ஆலயம் என்பதையும் உணர்ந்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

*முதல் வாசக முன்னுரை* (எசேக்கியேல் 47: 1-2, 8-9, 12)
இறைவாக்கினர் எசேக்கியலுக்கு இறைவன் காட்டிய காட்சியில் புதிய எருசலேமின் கோவில் பற்றிய காட்சிகள் இவ்வாசகத்தில் இடம்பெற்றுள்ளன. அதில் கோவிலின் முற்றம் எப்படி இருந்தது, கோவிலின் வாயிற்படியில் இருந்து தோன்றிய நீர் எப்பகுதிகளில் எந்தெந்த திசைகளில் எல்லாம் சென்றது என்றும், அந்த தண்ணீர் இறுதியில்

கடலோடு கலந்து இறுதியில் நல்ல நீராக மாறி எவ்வாறு நிலத்தினை வளப்படுத்துகின்றது என எடுத்துரைக்கும் இறைவாக்கினரின் வார்த்தைக்கு மனம் திறப்போம்.

***இரண்டாம் வாசக முன்னுரை*** (1கொரிந்தியர்: 9-11,16-17)

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் திருச்அவையில் காணப்படும் வேறுபாடுகளையும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பொறாமை, சண்டை சச்சரவுகள், போன்றவற்றைம் கூறி நாம் அனைவரும் இறைவனால் அடித்தளம் இடப்பட்டு கட்டப்பட்ட கட்டிடங்கள். கட்டிடம் கட்டும் கலைஞர்கள் பலராக இருந்தாலும் கட்டப்படும் கட்டிடம் ஒன்றாக இருப்பது போல நாமும் ஒன்றாக இருக்கின்றோம். கடவுளின் ஆவியார் நம்மில் குடியிருக்கிறார் என்றும், ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் அவர்களை கடவுள் அழித்து விடுவார் என்றும், கடவுளின் கோவில் தூயது, நாம் தான் கோயில் என்று கூறும் இவ்வாசகத்தை கவனமாக கேட்போம்.

***மன்றாட்டுகள்***

1. அன்பின் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவரத்தார் அனைவரையும் உன் திருக்கர வல்லமையால் ஆசிர்வதித்து எந்நாளும் இவர்களுடன் இருந்து எல்லா பணிகளையும் சிறப்பாக செய்ய உமது ஆற்றலை தந்து வழிநடத்துமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. இரக்கத்தின் தெய்வமே! என் இறைவா என் நாட்டை வழி நடத்தும் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதித்து உலகத்தில் நடக்கும் தீமைகளை கண்டு ஒதுங்காமல் அவற்றை தட்டி கேட்பவர்களாக வாழ மனத்துணிவை தந்து வழிநடத்துமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பு தந்தையே! இன்று உமது வார்த்தையை துணிச்சலாக எடுத்துக் கூறும் துறவிகள் பொதுநிலையினர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து செல்கின்ற பாதைகளில் எல்லாம் நீர் பக்க பலமாக இருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
4. அன்பின் இறவைா! இன்று உமது பணியை செய்வதற்கு தேவையான பிள்ளைகளை அழைத்து ஞானத்தை தந்து இறைபணியை சீரும் சிறப்புமாக செய்ய நல்ல மனப்பக்குவத்தை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

## பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு
## (16.11.2025)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே இன்று பொதுக்காலம் 33ஆம் ஞாயிறை சிறப்பிக்க கூடி உள்ளோம். இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் மீது அவரது நீதி இருக்கும் என்றும், ஆண்டவருக்கு எதிரான பாவங்களை செய்வோரை மட்டுமல்ல அதற்குத் துணை இருப்போரையும் விட்டு வைக்காது சுட்டெரித்து விடும் என்பதையும் கூறுகிறது. இரண்டாம் வாசகத்தில் உழைக்காதவன் உண்ணலாகாது சோம்பித்திரியக் கூடாது என்று பவுல் கூறுகின்றார். நற்செய்தியில் இயேசுவின் பெயரால் பலர் வந்து நானே அவர் என்று ஏமாற்றுவார்கள் அவர்கள் பின்னே போக வேண்டாம் என்று எச்சரிக்கின்றார் நம் ஆண்டவர். நாட்டுக்கு நாடு போரும், இயற்கை சீற்றமும், கொள்ளை நோய்களும், பயமுறுத்தக்கூடிய பெரிய





அடையாளங்களும் வானில் தோன்றும் முன் இயேசுவை பின்பற்றுவோரை பிடித்து துன்புறுத்துவார்கள் என்று கூறுகின்றார். ஆனால் நம்மை, கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி அவரே நமக்கு நாவன்மையும் ஞானத்தையும் கொடுப்பார் என்று கூறுகிறார். உலகம் முடிவிலே நாம் இத்தனை ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த நம் ஆண்டவர் நம் மீட்பர் இயேசு கிறிஸ்து வரும்போது இந்த உலகம் தர முடியாத அன்பு ,சமாதானம்,மகிழ்ச்சியை நிறைவாக கொடுப்பார். நம்மை இயேசுவின் பக்கம் நின்று மன உறுதியோடு வாழ்வைக் காத்துக் கொள்ள சொல்கிறார். சோம்பேறிகளாக இல்லாமல் நீதியுடன் நடந்து மன உறுதியோடு வாழ்வை காத்துக்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

***முதல் வாசக முன்னுரை*** (மலாக்கி 4:1-2)

முதல் வாசகத்தில் மலாக்கி இறைவாக்கினர் இஸ்ரயேலரின் குற்றங்கள் பற்றியும், அதனால் அவர்கள் அடைந்த தண்டனை தீர்ப்பை பற்றியும் கூறுகிறார். அதிலும் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள் குறித்தும், ஆணவம், கொடுமை செயல்புரிபவர்கள், ஆணவத்துடன் செயல்படும் அனைவருக்கும் வரவிருக்கும் அழிவு எப்படி இருக்கும் என்றும் கூறும், அதே நேரத்தில் கடவுளுக்கு அஞ்சி நீதிநெறிகளைக் கடைபிடிப்பவர்களுக்கு பாதுகாப்பும் நலனும் ஆறுதலும் கிடைக்கும் என்றும், நீதியின் கதிரவன் எழுவான் என்றும் கூறும் வாசகத்திற்கு கவனமுடன் மனம் திறப்போம்.

***இரண்டாம் வாசகம் முன்னுரை*** (2தெசலோனிக்கர் 3: 7-12)

திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் அப்போஸ்தலர் விசுவாசிகள் எவ்வாறு அமைதியாக கடின உழைப்புடன் மற்றவர்களுக்கு சுமையாக இல்லாமல் வாழ வேண்டும் என்பதை பற்றியும் சோம்பேறித்தனத்தை தவிர்த்து சொந்தமாக உழைத்து சாப்பிட வேண்டும் என்றும்,உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலகாது என்று கட்டளை கொடுத்திருப்பதையும், வேலை எதுவும் செய்யாமல் சுற்றித்திரிந்து பிறர் வேலையில் தலையிடும் அனைவரும், தாம் தங்கள் வேலையை செய்து, தாங்கள் உண்ணும் உணவை சேமிக்க, உழைக்க, வேண்டும் என அறிவுறுத்துவதை கவனமாய் உற்றுக் கவனிப்போம்.

***மன்றாட்டுகள்***

1. அன்பின் இறவைா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவரத்தார் அனைவரையும் நீர் நிறைவாக ஆசீர்வதித்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நல்ல வழியை கற்றுக் கொடுத்து விசுவாசத்தை கட்டி எழுப்புபவர்களாக வாழ உமது அருளை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறவைா! எங்கள் நாட்டை ஆளும் தலைவர்களை உன் பாதத்தில் அர்ப்பணிக்கின்றோம். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளில் பிரமாணிக்கத்துடனும் உண்மையுடனும் நீதியுடனும் ஆட்சி செய்ய நல்லறிவை தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. என் ஆசியால் உம்மை நிரப்புவேன் என்று கூறிய அன்பு இறவைா! உலக மக்களை உமது கரத்தில் தருகின்றோம், குடும்பங்களில் இருக்கும் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் சோம்பலாக இருந்து வாழ்வை இழந்து விடாமல் சுறுசுறுப்பாக இருந்து நன்மை தீமைகளை அறிய உமது ஞானத்தை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
4. விண்ணகத் தந்தையே! என் பங்கில் உள்ள சிறு பிள்ளைகளை நீர் ஆசீர்வதியும். சிறு பருவத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரும்